# வேலூர் காட்டிய வழி!





காமராஜ்—பக்தவத்சலம்
சுப்பிரமணியம்—அளகேசன்

தமிழ்நாடு காங்கிரஸ் பிரசார வெளியீடு

# வேலூர் காட்டிய வழி!

காமராஜ்—பக்தவத்சலம்
சுப்பிரமணியம்—அளகேசன்

தமிழ்நாடு காங்கிரஸ் பிரசார வெளியீடு

ஏப்ரல் 1961
பேச்சுக்களைத் தொகுத்தவர்:
திரு. எஸ். கருப்பையா, பி. ஏ.
விலை 20 ந. பை.

# போர்ப்பரணி !

சமீபத்தில் 24, 25-12-'60 தேதிகளில், வடாற்காடு மாவட்டம் வேலூர் நகரத்தில் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி கூடிய போது நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தலைவர்கள் முழங்கினார்கள்........

கூட்டணி அமைப்போம் என்று வெட்கமின்றி பேசி வரும் தமிழ்நாட்டு எதிர்க்கட்சிகளின் அவலப்போக்கினை, அவருக்கே உரிய, எளிய—இனிய—தமிழ் நடையில், தலைவர் **அளகேசன்** அவர்கள், படம் பிடித்துக் காட்டினார்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் தேவையில்லை, அவற்றாலே மக்களுக்குக் கடன் தொல்லைதானே தவிர, கடுகளவும் இலாபமில்லை என்று வாதமிட்டு வரும் 'பெரியவர்கள்' வெள்கும் வண்ணம், ஆப்பு அறைந்தாற் போன்ற ஆணித் தரமான விளக்கங்களை வரிசையாகப் பரப்பி, 'திட்டங்கள் மிக அவசியம், கடன் வாங்குவதில் கவலைப்பட ஏதுமில்லை, கோடிக்கணக்கான ஏழைகள் வாழ்வுயர திட்டமிட்ட பொருளாதாரமே வழிவகுக்கும்' என்பதனைக் கவினுற கொங்கு நாட்டு வித்தகர் நிதி அமைச்சர் **சுப்பிரமணியம்** அவர்கள் காட்டினார்.

காங்கிரசாட்சியில் உணவுப் பிரச்னையை வெற்றிகரமாகச் சமாளிக்கவில்லை என்ற ஓலம் எவ்வளவு தவறானது—சிந்தனைத் தெளிவற்றது—என்பதனையும், காங்கிரசுத் தலைவர்கள் உணவுப் பெருக்கத்திற்காக செய்து வரும் பகீரத முயற்சிகளையும் விளக்கி, முதுபெரும் தலைவர் **பக்தவத்சலம்** அவர்கள், பேச்சு மழை பொழிந்தார்.

இரண்டுநாள் நிகழ்ச்சிக்கும் சிகரம் வைத்தாற்போல, இறுதியில் உரை நிகழ்த்திய தலைவர் **காமராஜ்** அவர்கள்

வே—1

தமிழ் நாட்டுஎதிர்க்கட்சிகளின் அவமானகரமான செயல்களை வரிசைப்படுத்தினர்; 'பாரத நாடு வாழ்ந்தால்தான் தமிழகம் வாழும், பாரதத்திற்கு ஏதேனும் ஊறு விளையுமானல் தமிழ் நாடு வாழாது. வீழ்ந்துவிடும்,' என்ற எச்சரிக்கையையும் வழங்கினர்; குறுகிய சாதி, மத, இன, மொழி, மாகாண வேறுபாடுகளைப் புறக்கணித்து, 'காச்மீரம் முதல் கன்யா குமரி வரை, இது நமது நாடு, இதன் முன்னேற்றத்திற்காக நாம் உழைக்க வேண்டும்' என்ற கருத்து எல்லோர்க்கும் ஏற்படவேண்டும் என்பதனையும் வற்புறுத்தினர்.

ஆம், வேலூரில் தலைவர்களின் போர்ப்பரணிக்குப்பின், எதிர்க்கட்சியினர் எவற்றைத் தமது மூலபலமாகக் கொண்டிருந்தனரோ அவை முறிந்து வீழ்வதைப் பார்க்கின்ருேம்!

வேலூரில் எழுப்பப்பட்ட குரல் தமிழகம் பூராவும் கேட்கப்படவேண்டும் அல்லவா. எனவேதான், இச்சிறுநூல் உங்கள் கரங்களில் தவழ்கிறது. நூலிலுள்ள கருத்துக்களை நீங்கள் அறிந்திடவேண்டும்; பிறருக்கும் அறிவித்திட வேண்டும்.

இனி, நீங்கள் தேனைப்பருகிட தென்றலிடையே உலவிட தேம்பாகுச்சாற்றை அருந்திட நறுமண மலர்களை முகர்ந்திட கனிகளைச்சுவைத்திட கருத்துச் சோலைக்குள்ளே தாராளமாகப் புகலாம்..........

# பொருளாதார முன்னேற்றம், ஒழுங்கு, அமைதி நிலவ காங்கிரசாட்சியே தேவை!

## ஓ. வீ. அளகேசன்

### 1. வானமும் வாழ்த்துகின்ற ஆட்சியிலே வாழ்கிறோம்!

"அன்பார்ந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களே! பெருமை வாய்ந்த வேலூரில் நாம் கூடியிருக்கிறோம். இருபது வருடங்களுக்கு முன்பாக சிறந்த தேச பக்தரான திரு. சி. என். முத்துரங்க முதலியார் அவர்கள் தலைமையில் இதே ஊரில் கூடி போராட்டத்திற்கான தீர் மானங்களை நிறைவேற்றினோம்; இப்போது போராட்டம் முடிந்து இங்கு கூடுகிறோம். சென்ற ஜுலை மாதம் மதுரையில் வைகையாற்றங்கரையில் நமது கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. வேலூரில் பாலாற்றங்கரையில் இப்போது கூடுகிறோம். வைகையில் சாதாரணமாகத் தண்ணீர் ஓடாது; பாலாற்றைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். எப்போதும் காவிரியிலும், தாமிரபரணி ஆற்றிலும்தான் வற்ருது நீரோட்டம் இருக்கும். இம்முறை இந்த இரண்டு ஆறுகளிலும் நல்ல மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதைப் பார்த்தோம். ஆக, மழைபெய்து சந்தோஷமாக இருக்கிற தருணத்தில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். சாதாரணமாக மழை இல்லாவிட்டால் தர்மம் இல்லையென்று சொல்லுவார்கள். அதுவும் இப்போது தர்மம் தம்முடைய ஜேபியில் இருப்பதாகவே சிலர் பேசுகிருர்கள். மழை இல்லாவிட்டால் நல்ல ஆட்சி இல்லையென்று சொல்லுவார்கள்;

எனவே, தேவர்களும் காங்கிரஸ் ஆட்சியை நல்லாட்சிஎன்று வாழ்த்துகிறார்கள் என்றே கொள்ளலாம்!

## 2. வடாற்காடு மாவட்டத்தின் வீரர் வரிசை

"வேலூர் பல தேசபக்தர்களுக்குப் பெயர் பெற்ற திருத் தலம்; சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் வடாற் காடு ஜில்லா இடம் பெற்றிருக்கிறது. நான் தேசீயப் போராட்டத்தில் சேர்ந்தபோது முதன்முதலில் கேட்ட மூன்று பெயர்கள் வேலூர் **கோடையிடி குப்புசாமி முதலியார், ஜனுப் உபயதுல்லா சாகிப்,** திருவண்ணுமலை **என். அண்ணுமலை பிள்ளை** ஆகியோர் ஆவார். அம்மூன்று பேர்களும் வடாற்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் தேசம் பூராவும் கால்நடையாகச் சுற்றிய உத்தமர்கள். அவர்களில் வயதில் இளையவரான திரு. உபயதுல்லா அவர்கள் துரதிர்ஷ்டவசமாக இப்போது நம்மிடையே இல்லை; அவருடைய பெயரால் இந்த மண்டபம் அமைத்து இருக்கிறோம். திரு. குப்புசாமி முதலியார் அவர்கள் இப்போது படுத்த படுக்கையாய் இருக் கிறார். அவரைச் சென்று பார்க்க வேண்டுமென்று இருக் கிறோம். திரு. அண்ணுமலை பிள்ளை அவர்கள் இப்போது நம்மிடையே இருக்கிறார்; பரமசிவன் மாதிரி நெற்றியிலே வீபூதி துலங்க மேடையில் வீற்றிருக்கிறார்! (கை தட்டல்)

## 3. காங்கிரசை ஒழிக்கும் கருத்தே பாவகரமானது

"காங்கிரஸ் தேசத்தில் எவ்வளவு ஆழமாக, வலுவாக இயங்கி வருகிறது என்பதை நேற்று ஊர்வலத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் காட்டிய உற்சாகத்திலே பார்த் தோம். காங்கிரஸ் மகாசபையின்பால் மக்கள் கொண்டுள்ள அன்பு, குறிப்பாகத் தாய்மார்கள் காட்டிடும் பக்தி, இவற் றில்தான் காங்கிரஸ் மகாசபை வேர் ஊன்றியிருக்கிறது. அத்தகைய ஒரு ஸ்தாபனத்தை எவ்வளவு பெரியவர்களானு லும் அழித்துவிட முடியாது. அழித்து விடலாம் என்று

நினைப்பது வெறும் பகற்கனவே ஆகும் (பலத்த கைதட்டல்) அதை அழிக்க நினைப்பதே மகாபாவம் என்று சோல்லுவேன்!

ஒரு பிள்ளை தன் தாயினிடத்தில் நன்றாக வளர்ந்து பெரியவனான பிறகு, தாயை அழிக்க நினைத்தால் எவ்வளவு பாவமோ அவ்வளவு கொடியது.

" நாட்டுக்குப் பல நற்பணிகள் புரிந்து இன்னமும் பல பணிகள் புரிய காத்திருக்கின்ற ஒரு ஸ்தாபனத்தைக்கலைக்க வேண்டும் அல்லது சீர்குலைக்க வேண்டும் என்பது பாவமான எண்ணமாகும்.

### 4. நெருப்புச்சட்டி கட்சியின் நேர்மையற்ற செயல்!

" சிலர் இப்போது காங்கிரசுக்குக் கொள்ளி வைப்பதற்காக கிளம்பி யிருக்கிறார்களாம். இதை அவர்களே சொல்லிக் கொள்கிறார்கள். சுதந்திரக் கட்சியின் மாகாணத் தலைவர் ஒரு ஊரில் பேசுகின்றபோது நெருப்புச் சட்டியும் கொள்ளியும் அவர்களிடம் தயாராக இருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார். ஆரம்ப நிலையிலே உள்ள ஒரு கட்சி இப்படி இருக்கலாமா? அது ஒரு பக்கம் இருக்க, பதவி ஆசைதான் இதற்கெல்லாம் காரணம். ஒரு கட்சி பிறக்கின்றபோதே நெருப்புச் சட்டி, கொள்ளி இவற்றோடு கிளம்பி யிருக்கிறது என்றால், (ஒரே சிரிப்பு) அதனுடைய கொள்கையே இதுதான் என்றால், அதனுடைய சாதனைகள் என்னவாக இருக்குமென்று சொல்லவேண்டியதில்லை; இதைச் செய்வோம் அதைச் செய்வோம் என்று பேசுவதை விடுத்து, அதை அழிப்போம், இதைக் கொளுத்துவோம் என்று பொறுப்பற்ற முறையிலே பேசுவது விவேகம் அற்ற செயலாகும். அவர்கள் காங்கிரசைக் கலைக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். உலக நிலைமையைக் கூர்ந்து கவனித்தால் இதற்கான விடையை நாம் தெரிந்துகொள்ள முடியும்.

## 5. காங்கோ காட்டும் பாடம்

"சுதந்திரம் பெறுவதோடு சுதந்திரப் போராட்டம் முடிவடைந்தது. அடுத்தாற் போல சுதந்திரத்தைப் பேணுவது ஆரம்பமாகிறது. எனவே காங்கிரசின் பொறுப்பு கூடியிருக்கிறது. இந்த நிலைமையில் அதனைக் கலைத்து விடு என்பது விவேகமான பேச்சாகாது.

"மற்ற நாடுகளின் நிலைமையைப் பார்ப்போம்; காங்கோ என்னும் நாட்டைப் பற்றி முன்பு யாருக்கும் தெரியாது. சுதந்திரம் பெற்றவுடன் அதன் பெயர் தெரிகிறது; எந்த நிலைமையில் அந்த நாடு இருக்கிறது? பிரதம மந்திரியும் ஜனாதிபதியும் ஒருவரை ஒருவர் 'டிஸ்மிஸ்' செய்துகொண்டு இருக்கிறார்கள். இருவரையும் வேறொருவர் 'டிஸ்மிஸ்' செய்கிறார். தனிநாடு பிரிவதாக வேறு செய்தி வருகிறது. இந்த நெருக்கடியில், பல சிறு போர்களை உலகப் போராக ஆகாமல் காப்பாற்றிய ஐ. நா. சபைக்கே ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது. இவ்வளவு அலங்கோலங்களுக்கும் என்ன காரணம்?

> "காங்கோவில் பாரத நாட்டில் இருப்பது போல ஸ்திரமான, பலமான, தலைமை இல்லை. ஒரு சிறிய நாடே இப்பாடுபடுகிறது. பாரதநாடு பல கோடி மக்கள் வாழும் மிகப் பெரிய நாடு. இங்கு கயிற்றிலே மணிகள் கோப்பதுபோல, மக்களை ஜனநாயகக் கயிற்றின் வழி இணைத்துச் செல்லும் ஒரே ஒரு ஸ்தாபனம் காங்கிரஸ் மகாசபைதான். எனவே காங்கிரசைக் கலைத்துவிடு என்போர் தேச நலனில் அக்கறை கொண்டோரா என்று கேட்கிறேன்; நாட்டைக் காப்பாற்றும் பொறுப்பு அவர்களுக்கு இல்லையா? தேச மக்களிடம் அவர்களுக்கு நல்ல எண்ணம் இருக்கிறதா?

பாரத் மக்கள் நாசமாய்ப்போக வேண்டுமென்று எண்ணுபவர்கள்தான் அப்படி துணிந்து கூறுவார்கள்!

### 6. நேபாளத்தைக் காட்டியவர் நேர்மையை மறந்தது ஏன்?

"சமீபத்தில் நேபாளத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் பற்றி பார்லிமெண்டில் பண்டித நேரு அவர்கள் தெரிவித்த கருத்துக்களை நீங்கள் படித்திருப்பீர்கள். அதைப்பற்றி அங்கே முன்பு நடந்துவந்த ராணுக்கள் ஆட்சியை மாற்றியது பிசகு என்று ராஜாஜி சொல்லியிருக்கிறார். அவசரப்பட்டு அந்த ஆட்சியை மாற்றியதால் கட்டுப்பாடு போய்விட்டது என்றும், அதனால்தான் சமீபகாலத்திய விளைவுகள் ஏற்பட்டனவென்றும் கூறியிருக்கிறார். நேபாளத்தைப்பற்றி இவ்வளவு அக்கறையோடு சொன்னவர் இந்திய நிலைமை என்னவென்று சிந்தித்திருக்கவேண்டாமா? இங்கே இப்போது ஒற்றுமையும் கட்டுப்பாடும் கொண்ட ஆட்சி நடைபெறுகிறது. நிற்கின்ற கல் தூணை இல்லை என்று சொல்லமுடியாது. அதேபோல நாட்டில் அமைதி நிலவுவதை யாரும் மறுக்கமுடியாது. அப்படியிருக்க காங்கிரசைக் கலைக்கவேண்டும் என்று சொல்லுகிறாரே, அது நியாயமா? அவர் கூற்றுப்படி நேபாளத்திற்கு ஒரு பாடம். நமக்கு மட்டும் அது இல்லையா? தமிழ்நாட்டில் வேறு எங்கும் இல்லாத அளவில், திருந்தி, குழப்பமின்றி, அமைதியான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இதைப் பார்த்து எதிர்க்கட்சிகள் பெருமைப்படவேண்டும். அவர்களுக்கு வேலை செய்யவும் இதுதான் நல்ல சூழ்நிலை. ஆனால் அதை மறந்து காங்கிரசுக்கு விரோதமாக மூன்று கட்சிகள் கூட்டு சேரப்போவதாக தெரிவித்து உள்ளன.

### 7. கூட்டு சேருவோருக்குக் கோட்பாடு ஏதும் உண்டா?

"சுதந்திரக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் தி. மு. கழகமும் கூட்டுச் சேரப் போகின்றனவாம். அவற்றுக்

குள்ளே minimum programme, அதாவது குறைந்தபட்ச திட்டம் ஏதாவது உண்டா? அரசியல் ஒற்றுமையேனும் இருக்கிறதா? பொருளாதாரக் கொள்கைகளிலாவது ஒற்றுமை உண்டா? கூட்டுறவுக்கு அரசியல் அடிப்படை என்ன? காங்கிரஸ் பிடிக்கவில்லை என்பது மட்டும் கூட்டு சேருவதற்குக் காரணம் ஆகாது.

"பண்டித நேரு அவர்கள் சொல்லுவதைப் போல சுதந்திரக் கட்சி பழைய நிலையை அமுல்நடத்தப் பார்க்கிறது. அதனுடைய சென்ற நூற்றுண்டுக் கொள்கைகள் பொருளாதார முன்னேற்றத் துறையில் உந்தப்பட்டுவரும் மக்களுக்கு ஒத்துவராது. கம்யூனிஸ்ட் கட்சியோ இதற்கு நேர்மாருனது; எல்லா அதிகாரங்களையும் ஒரே கட்சி வைத்துக்கொள்ள வேண்டும் என்பது அதனுடைய சித்தாந்தம். இந்த இரண்டு துருவங்களும் ஒன்று சேருவது எப்படி? தி. மு. க. ஒரு கையைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மற்றொரு கையைச் சுதந்திரக் கட்சிக்கும் கொடுத்துக் கொண்டுள்ளது. தன்னிடம் கொள்கையில்லாததால் தான் இரண்டு கட்சிகளும் தன்னை அணுகுகின்றன என்பது, பாவம், அந்தக் கட்சிக்குத் தெரியவில்லை; அதைப்போய் தங்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் என்று கருதுகிருர்களே, அதைக்கண்டு பரிதாபப்படவேண்டும். (சிரிப்பு)

### 8. கூட்டு நிலைக்குமா? கூட்டாட்சி நடைபெறுமா?

"இத்தகைய கூட்டு வெற்றிபெற்ருல் நிலையான ஆட்சி நடைபெறுமா? எந்த அடிப்படையில் இவர்கள் சேர்ந்து ஆட்சி நடத்துவார்கள்? தமிழ்நாடு தனியாகப் பிரிய வேண்டும் என்பவர்களும், நம்முடைய நாட்டைப் பிரிக்காமல் வைத்திருக்கவேண்டும் என்று கருதுபவர்களும் எப்படி ஒன்ருக இருக்கமுடியும்? அதுவும் ராஜாஜி அவர்கள் தலைமையில் இவர்களால் இருக்கமுடியுமா? அவருக்கு அரவணைக்கும் பண்பு இல்லை; எதேச்சாதிகாரமான போக்கு படைத்

தவர். அவர் கூட்டு சர்க்காரில் இருந்து ஓடிவிட்டால் பிறகு யார் நடத்துவார்கள்? மூன்று கோடி தமிழர்களின் கதி என்ன? கூட்டணித் தலைவர் மட்டும் இதற்குப் பொறுப்பல்ல; மக்களே இதற்கு பொறுப்பாவார்கள். கூட்டுக் கட்சிகளின் எண்ணம் நிறைவேறினுல் எந்த விதத்திலும் நிலையான ஆட்சி அமையாது. ஆகவே அதை அறிந்து தமிழ் மக்கள் காங்கிரசை ஆதரிக்க வேண்டியது அவர்களுடைய கடமை யாகும். இதை விவேகமுள்ள தமிழ் மக்கள் சிந்திப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

### 9. வால்பிடித்தவர்கள் யார்? வயிறு வளர்த்த கூட்டம் எது?

"எதிர்க்கட்சியினர் மிக மட்டமாக நமது அமைச்சர் களை ஏசி வருகிருர்கள். அவர்கள் டில்லிக்கு வால் பிடிக் கிருர்களாம், காவடி தூக்குகிருர்களாம்; நேற்றுப் பிறந்த குழந்தை தாயாருக்குப் புத்தி சொல்லுவதைப் போல இருக்கிறது இது. ஆங்கிலேயன் காலத்தில் இந்த தைரியம் எங்கு போயிற்று? டில்லியிலும் சென்னையிலும் ஒரே கட்சி ஆளுகிறது. ஆகவே அவர்கள் சேர்ந்து பேசுவார்கள். அது வால் பிடிப்பது ஆகுமா? மூன்ருவது திட்டத்தில் நமக் குரிய பங்கு கிடைக்கவில்லை என்று சொல்லுகிருர்கள். நான் சொல்லுகிறேன்: ஜனத்தொகை நில விஸ்தீரணப்படி நமக்குச் சற்று அதிகமாகவே கிடைத்திருக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகச் செய்யப்படும் முயற்சி பிச்சை எடுப்பது அல்ல; பேசி வாங்குவது ஆகும். எல்லோ ருடைய கூட்டுப்பொறுப்புதான் திட்டம். இதை மறந்து தி.மு. கழகம் அவர்களுடைய பரம்பரையை ஒட்டி வால், காவடி என்கிறது. இந்தத் தப்பான பிரசாரத்தை முறியடிக்க வேண்டியது காங்கிரஸ் ஊழியர்கள் கடமை.

### 10. எதிர்க்கட்சிகளை விட்டு ஓடோடி வருகிருர்கள்!

"இளைஞர்களுக்கு ஒரு வார்த்தை. இன்று இளைஞர்கள்

மாற்றுக் கட்சிகளிலிருந்து காங்கிரசில் வந்துசேருகிறுர்கள் அவர்களை நாம் தாராளமாக சேர்த்துக் கொள்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வருபவர்கள், கற்றுக் கொண்ட பேச்சுடன் வருகிறுர்கள். இங்கு நாம் சாதித்துள்ள காரியங்களை வைத்துக்கொண்டு தி. மு. கழகத்தையே பலமாக அவர்கள் தாக்குவதைப் பார்க்கிறோம். தோன்றி மூன்று நாட்கள்கூட ஆகாத சுதந்திரக் கட்சியிலிருந்துகூட இங்கு வந்து சேர ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் அனைவரையும் நாம் சந்தோஷமாக வரவேற்கிறோம். இன்னும் உள்ள தம்பிமார்களையும் இங்கு வந்து சேரும்படி அழைக்கிறோம். ஏனெனில் அவர்களுடைய ஊக்கத்திற்கும், உற்சாகத்திற்கும் ஏற்ற லட்சியம் அந்தக் கட்சிகளில் இல்லை.

### *11. வாருங்கள், சேருங்கள், வறுமை தீர உழைத்திடுங்கள் !*

" எனவே எல்லோரும் வாருங்கள், **திருவள்ளுவர் காலம் முதல் இருந்துவரும் வறுமையை ஒழிப்போம்.** இந்தப் பணி விளையாட்டானது அல்ல. வந்து சேருபவர்கள் பொறுப்போடு இருக்கவேண்டும். பழைய ஊழியர்கள், நாம் ஏற்கெனவே தொண்டுகள் செய்திருக்கிறோம், அது போதும், என்று கருதுகிறுர்கள். அது பிரயோஜனமில்லை. இப்போது என்ன செய்கிறீர்கள்? இப்போதும் பணி செய்யத் தயார் என்று பொதுமக்களிடம் பணிவாக விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். அந்த வழக்கம், சேவா மனப்பான்மை, காங்கிரசிலே உள்ள அனைவருக்கும் வரவேண்டும்.

" வருகின்ற ஆண்டு சோதனை நிறைந்த வருடமாக இருக்கும்; நம்மைக் கண்டு பொறுக்காத எதிர்க்கட்சியினர் பல முயற்சிகள் செய்வார்கள். காங்கிரசைக் கட்டிக் காக்கும் பெரும்பொறுப்பு நமக்கு இருக்கிறது. எனவே சர்வ ஜாக்கிரதையுடன் செயல் ஆற்றவேண்டும். சிறிது அசங்

தாலும் பாக்கியத்தை இழந்து விடுவோம். அத்தகைய நிலை ஏற்படாமல், திட்டம் நிறைவேற, அமைதியான ஆட்சி தொடர்ந்து நடைபெற நீங்கள் முன்வந்து ஒத்துழைக்க வேண்டும். அதற்கான மார்க்கத்தை வேலூர் காட்டவேண்டுமென்றும், அதற்கேற்ற தீர்மானங்கள் இங்கே உருவாக வேண்டுமென்றும் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்! (பலத்த கைதட்டல்).

# எளியவர்கள் முன்னேற்றத்திற்கு ஏற்ற இயக்கம் காங்கிரசே!

# 'அசட்டு' அண்ணுதுரை அளித்த ஆயிரம் கோடி திட்டத்தின் அவலட்சணம்!!

## சி. சுப்பிரமணியம்

### 1. பிரச்னை என்ன?

தலைவர் அவர்களே! நண்பர்களே! உங்கள் முன்னாலே இருக்கக்கூடிய தீர்மானத்தைப் பற்றி பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திட்டத்தைப்பற்றிய குறைகள் முக்கியமாக இரண்டு இடங்களில் இருந்து வருகின்றன என்று குறிப்பிட்டார்கள். இந்த திட்டம் அவசியமில்லை, இதைப் போட்டுக்கொண்டு அதற்காக நாம் ஏன் கஷ்டப் பட்டுக்கொண்டு வரவேண்டும், என்ற குறை ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தில் திட்டத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் பங்கு போதாது, அதிகம் வேண்டும் என்கின்ற குறை. திட்டத்தின் அடிப்படையைப் புரிந்து கொண்டால் இரண்டு பேருக்கும் பதில் சொல்லிவிடலாம். பொதுவாக வரி கொடுப்பவர்கள் மத்தியில், திட்டத்திற்காக அதிக வரிகள் போடுகிறார்களே என்று சொன்னால் நம்புவார்கள். அதேபோல நமக்கு ஆயிரம் கோடி வேண்டும், நிறைய வேண்டும் என்று கேட்டாலும் சரி என்ற கருத்து ஏற்படும். இரண்டுக்கும் மத்தியில் எந்த அடிப்படையில் திட்டம் வகுக்கப்படுகிறது, திட்டங்களின் பங்கு எப்படி ஒவ்வொரு ராஜ்யத்திற்கும்

கொடுக்கப்படுகிறது, என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"இன்றுள்ள நிலைமையிலே இருக்க விரும்புகிறோமா, அல்லது முன்னேற விரும்புகிறோமா? இதுதான் நம் முன்னாலே இருக்கின்ற பிரச்னை.

*2. நிலம் வளரவில்லை, மக்கள் பெருகுகிறார்கள்!*

"நம் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் விவசாயத்தை நம்பி வாழ்ந்தவர்கள். இரண்டு பேர்கள் (கணவனும் மனைவியும்) ஐந்து ஏகராவை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறக்கின்றன; இப்போது ஐந்து பேர்கள் அந்த ஐந்து ஏகரா நிலத்தில் பயிர் செய்து வாழவேண்டும். அந்தக் குழந்தைகளுக்கு வயதாகி கல்யாணம் செய்து கொடுத்ததும், இரண்டாவது தலைமுறை பிறக்கிறது. அப்போது சுமார் இருபது பேர்கள், சாதாரணமாகப் பார்த்தாலும்கூட, அந்தக் குடும்பத்தில் இருப்பார்கள். அவர்கள் அனைவரும் ஐந்து ஏகர் நிலத்தை வைத்துக் கொண்டு வாழவேண்டும். அதனால் அவர்களிடம் வறுமை வந்து சேருகிறது; அடுத்த தலைமுறையில் மேலும் பல குடும்பங்களாகப் பெருகி இன்னமும் தரித்திரம் கூடுகிறது.

"நூறு வருஷங்களுக்கு முன்னால் இருந்த நிலம்தான் இப்போதும் உள்ளது; ஆனால் மக்கள் தொகை கிட்டத்தட்ட நான்கு முறை பெருகிவிட்டது. அப்போதே "வாய்க்கும் கைக்கும்" என்ற நிலைமையில் இருந்தது என்றால் இன்றைக்கு இன்னும் பட்டினியும் பஞ்சமும் ஏற்பட்டு இருக்கின்றன என்பதில் ஆச்சரியமில்லை.

*3. விவசாயம் மட்டும் போதாது; தொழில் துறையும் வளர வேண்டும்.*

"எனவேதான் இந்த நிலைமை மாற வேண்டுமானால் விவசாயத்தை மட்டும் நம்பி முடியாது. மேனாடுகளில் அப்

படிதான் செய்கிறார்கள். இங்கிலாந்தில் நூற்றுக்கு ஐந்து பேர்தான் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியாவில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றிய பிறகு கூட நூற்றுக்கு எழுபது பேர் விவசாயத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். விவசாயத்தில் மட்டும் ஈடுபடாமல் வேறு தொழில்களிலும் நாம் ஈடுபடவேண்டும். அப்படி செய்வதின் மூலம் நம் வாழ்க்கைத்தரம் உயரும் என்பதில் சந்தேகமே இல்லை.

" சிலர், இதெல்லாம் வேண்டாம், முன்பு இருந்ததைப் போலவே இருக்கட்டும், என்று சொல்லுகிறார்கள். அதை மக்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டால் எனக்கு ஆட்சேபணை இல்லை.

> " வைத்தியவசதி, சுகாதார , கல்வி வசதி, பஸ், கார் போன்ற போக்குவரத்து சாதனங்கள், நல்ல துணிமணிகள், வீடுகள், நாகரிகமான வாழ்க்கை, இன்னும் சொல்லப்போனால், ரேடியோ, சினிமா, டெலிவிஷன் போன்ற சாதனங்கள் இவற்றையெல்லாம் ஏற்படுத்த வேண்டுமென்றால் விவசாயத்தை மட்டும் நம்பினால் போதாது.

" மற்ற துறைகளிலும் வளம் பெருக வேண்டுமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

### 4. தொழில் துறைகளில் நிறைய வருமானம் கிடைக்கும்.

" இப்போதும் நூற்றுக்கு எழுபது பேர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். இதற்குப் பதில், இங்கிலாந்திலோ அமெரிக்காவிலோ இருப்பதுபோல் மாறவேண்டும் என்று சொல்லவில்லை ; நூற்றுக்கு ஐம்பது பேர் விவசாயத்தில், என்றேனும் செய்துவிட்டால் நல்லது. ஐம்பது பேர்கள் மற்ற தொழில்கள் என்று சொன்னால் சமுதாயத்திற்கும் கூடுதலான "வரும்படி" கிடைக்கிறது ; விவசாயத்தில் பார்த்தால் தினசரி பன்னிரெண்டணு அல்லது ஒரு

ரூபாய் கூலி கிடைக்கிறது. ஆனல் ஆலைத் தொழிலில் மாதம் ஒன்றுக்கு ஒரு ஆண் நூற்று இருபது ரூபாயும் ஒரு பெண் தொண்ணூறு ரூபாய்க்குக் குறையாமலும் சம்பாதிக்க முடிகிறது.

"எனவே புதிய இயந்திரங்களை வரவழைத்துத் தொழில் துறையை வளப்படுத்தினல், மக்கள் வருமானமும் பெருகுவதோடு, தேசிய வருமானமும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.



"புதிய இயந்திரங்களை வாங்க நமக்கு வசதி இருக்கிறதா? நூற்று ஐம்பது ஆண்டு அடிமைகளாக வாழ்ந்த காரணத்தால் நாம் சக்தி இழந்துவிட்டு இருக்கிருேம்.

## 5. வறுமைச் சங்கிலி நீண்டு, வளர்ந்து வருகிறது

"நம் கையில் கொஞ்சம் பணம் இருந்தால் சிறிது கடன் வாங்கிக் கொள்ளலாம்; கையில் ஏதும் இல்லாமல் தொழில் துவக்க முடியாது. ஆகையினுலே புதிய தொழில்களைத் துவங்க முடியவில்லை; ஆகவே வறுமை. வறுமையின் காரணமாக மறுபடியும் தொழில் துவங்க முடியாத நிலை; அதன் காரணமாக இன்னும் அதிகமான வறுமை. இது ஒரு சங்கிலி: பலவீனத்தினுல் இன்னும் அதிக பலவீனம் ஏற்படுகிறது.

> "நோயாளி சாப்பிடாததால் பலவீனம் அடைகிருர். அவருடைய பலவீனத்தை நீக்க மருந்து, புதுரத்தம், வயிறுநிறைய சோறு ஆகியவற்றை வைத்தியர் கொடுப்பார். ரத்தம் மிகவும் குறைவாக இருக்கிறது என்ருல், மற்றவர்களிடமிருந்து அந்த உடலுக்கு ஏற்ற ரத்தத்தை எடுத்து 'இன்ஜெக்ட்' பண்ணுகிருர். நோயாளி வெளி ரத்தத்தின் மூலம் கிடைக்கும் பலத்தினுல் தன்னுடைய உடலிலும் ரத்தம் ஊறக் காண்கிருர். அவருக்குப் புதிய சக்தி ஏற்பட்டுவிடுகிறது.

**6. நோயாளிக்கு ரத்தத்தைப்போல நமக்கு டாலரும், ரூபிளும்!**

பொருளாதாரத்திலும் பலவீனமான தேசத்திற்கு இத்தகைய 'நவீன வைத்திய முறை' செய்யப்படுகிறது. வெளிநாடுகளில் உள்ளவர்களது இயந்திர வலிமையினுல் புதுச் சக்தி ஏற்பட்டு பொருளாதார பலம் உண்டாகிறது. சமுதாயத் திட்டங்களுக்கான அடிப்படையான உண்மை இதுதான். நோயாளிக்கு வேறு நல்ல ரத்தம் சேர்க்கப்பட்டால்தான் நோய் அகல்வதுபோல ஏழ்மை நிலையிலே உள்ள நமது நாட்டிற்கு வெளிநாட்டு இயந்திரங்களும் உற்பத்திச் சாதனங்களும் தரப்பட்டால்தான் வறுமை அகலும்.

"பழைய காலத்தில், நான் இப்போது சொன்ன வைத்திய முறையைச் சிலர் கிண்டல் செய்திருக்கிறுர்கள். ஒருவர் ரத்தத்தை இன்னெருவருக்குப் பாய்ச்சுவதா, அது எப்படி நடக்கும், என்று பயமுறுத்தியிருக்கிறுர்கள். அந்தக் கிண்டலும் பயமுறுத்தலும் அர்த்தமற்றவை என்று இப்போது தெரிந்துகொண்டு இருக்கிறேம். நவீன வைத்திய முறையைப் பழமையாளர்கள் கிண்டல் செய்ததைப் போல வெளிநாடுகளிலிருந்து நாம் கடன்கள் பெற்று இயந்திரங்கள் வரவழைப்பதையும் சிலர் கேலி செய்கிறுர்கள், குறை கூறுகிறுர்கள்.

**7. உற்பத்திக்குக் கடன், உபயோகத்திற்காக அல்ல:**

"நாம் கடனுகக் கேட்டு வாங்குகிறேம் என்பது உண்மைதான். வெளிநாடுகள் கடன் தருகின்றன; திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்ற கருத்துடன்தான் வாங்குகிறேம். ஆனுல் சிலர் எப்போதுமே கடன் வாங்கக் கூடாது என்கிறுர்கள்.

ஒருவன் ஒரு வெற்றிலே பாக்குக் கடை
வைக்கவேண்டுமென்று நினைக்கிறுன் என்று வைத்

துக்கொள்ளுங்கள். அவன் கையிலுள்ள பணம் மிகவும் குறைவு; எனவே நூறு ரூபாய் கடன் வாங்கிக் கடையை வைக்கிறான். வியாபாரம் செய்கிறான்; வியாபாரம் நன்றாக நடக்கிறது; அவ்வப்போது வட்டியும் முதலுமாக சேர்த்துக் கடனைக் கொடுத்து வருகிறான். சிறிது காலத்தில் கடனும் தீர்ந்துவிடுகிறது; கடையும் சொந்தமாகிறது. நூறு ரூபாய் கடன் வாங்கக்கூடாது என்ற தத்துவத்தில் இருந்தால் ஒருவித முன்னேற்றமும் ஏற்பட்டு இருக்காது. அவன் ஏழ்மையிலே இருந்து இருப்பான்.

அதேமாதிரியாகத்தான் நாமும் வெளிநாடுகளில் இருந்து கடன் வாங்குகிறோம், எதற்காகக் கடன் வாங்குகிறோம் என்பது மிகவும் முக்கியம். சொந்த உபயோகத்திற்கு என்று இல்லாமல், உற்பத்திக்காக கடன் வாங்கி அதைத் தொழிலில் போட்டுத் திருப்ப முடியுமானால் நஷ்டம், இகழ்ச்சி எதுவுமே இல்லை.

"இயந்திரங்கள் வாங்க வேண்டுமென்றால் நம்முடைய 'கரன்சி' நோட்டுகளைக் கொடுத்துப் பெறமுடியாது; நான் இங்கிலாந்திற்குப் போனபோது இதை நேரில் கண்டேன்; நம்முடைய நோட்டுகளுக்கு அங்கே மதிப்பில்லை. ஆகவே அவர்களுக்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்துத்தான் நமக்கு வேண்டிய இயந்திர சாமான்களைப் பெறமுடியும். அவர்களுக்கு வேண்டிய சாமான்கள் நம்மிடத்திலே இல்லை, எனவே இயந்திர சக்தியை வெளிநாட்டிலிருந்து பெற கடன் வாங்கித்தான் ஆகவேண்டும், வேறு வழியில்லை. பின்னால் அவர்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுக்கலாம். இயந்திர சக்தி வேண்டுமென்றால், மீண்டும் சொல்லுகிறேன், கடன் வாங்கித்தான் தீரவேண்டும்; இல்லை, கடவுள் விட்டவழி என்பதானால், மூலையில் உட்காரவேண்டும். ஆனால் திட்டங்கள் நிறைவேறாது.

“ஆகையால் சுபிட்சம் ஏற்படவேண்டுமென்ருல் கடன் வாங்கித்தான் ஆகவேண்டும். இன்றைக்கு அமெரிக்கா வாக இருந்தாலும் சரி, ஜெர்மனியாக இருந்தாலும் சரி, ரஷ்யாவாக இருந்தாலும் சரி, திட்டங்கள் நல்லபடி நடக்க வேண்டுமென்று கடன் கொடுக்கின்றன. வெளிநாட்டி லிருந்து கடனுகப் பெறும் இயந்திர சக்தியை நல்ல முறை யில் உபயோகிக்க வேண்டும். எதை வரவழைத்தால் நல் லது, எதை முதலில் வரவழைக்கவேண்டும், எதன்மூலம் சக்தியைப் பெருக்கி, கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியும், என்றெல்லாம் பார்த்து வாங்கவேண்டும்.

“எந்த வியாபாரத்திலும் முதலைக் கவனமாகப் பார்த் துத்தான் போடவேண்டும். அதேபோலத்தான் நாட்டிற் கான திட்டமும்; நாமும் கையிலுள்ளவைகளைப் போட்டு, கடனையும் வாங்கிப்போட்டு உற்பத்தியைப் பெருக்குவதே திட்டமாகும்.

## 8. முதியவர்கள் முனகலாம், இளைஞர்கள் வாழ வேண் டாமா?

“இதெல்லாம் வேண்டாமென்ருல், பஞ்சம், வறுமை, கல்வியின்மை ஆகியவை நிரந்தரமாக இருக்கும். அதற்கு எவரும் ஒப்பமாட்டார்கள். எல்லோரும் சுபிட்சம் வேண்டு மென்கிருர்கள். அதெல்லாம் கூடாது, நாம் பழைய சோற்றைச் சாப்பிட்டுவிட்டு, ஒரு சின்ன துண்டுடன், நூற் றுக்கு ஒருவர் படித்தால் போதுமென்று விட்டுவிட்டு சும்மா இருந்துவிடுவதென்ருல் சரி; ஆனுல் அதற்கு இளைஞர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். “விதிக்கு விதி செய்வோம்” என்பது அவர்களது குரல். **திட்டம் இளைஞர்களுக்காகத்தான்; வருங்காலத்திற்காகத்தான்.** இளைஞர்கள் வாழ விரும்புகிருர்கள். நம்முடைய குழந்தைகளும் இளைஞர்களும் முன்னேற நினைப் பதில் தப்பு இல்லை. பெரியவர்களுக்கு இது பிடிக்கவில்லை

யென்றால் வீட்டிலே உட்கார்ந்துகொள்ளுங்கள் (பலத்த கைதட்டல்).

### 9. ஆயிரம் கோடி கேட்ட, அசட்டு அண்ணுதுரை !

''திட்டத்தை எதிர்க்கும் வேறொரு சக்தியும் இருக்கிறது. ஏன் ரூ. 250, ரூ. 500 கோடி, ஆயிரம் கோடியாவது கேட்கக்கூடாதா, என்பது அவர்களது பேச்சு. குடும்பத்தில் நாலுபேர் இருந்தால் அதைப் பிரிக்க விரும்புபவன் எதையாவது கேட்கத் தூண்டிவிடுவான்; 'ஐம்பது ஏகரா பங்கு கேள், தரவில்லையென்றால் பாகப்பிரிவினை கேள்,' என்பான். அதேபோல தி. மு.க. முடக்கு வாதம் செய்கிறது. "ஆகாததைக் கேள், கொடுக்கமுடியாது என்றால் பிரிந்துவிடு'' என்பதுதான் அவர்களுடைய பேச்சு !

> "ஆயிரம் கோடி ரூபாய் கேளுங்கள் ; டில்லியில் உள்ளவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்றால் 'டு' விட்டுவிட்டு வந்துவிடுங்கள்,'' என்று குழந்தைத்தனமாக சொல்லுகிறார்கள்.

''உண்மையில் என்ன நடக்கிறது என்று கவனிக்க வேண்டும். டில்லிக்கு நமது முதலமைச்சர் காமராஜ் அவர்களைப்போல எல்லா ராஜ்ய முதலமைச்சர்களும் வருவார்கள். அப்போது நமது முதல் மந்திரி திரு. காமராஜ் அவர்கள், 14 ராஜ்யங்களுக்கும் மொத்தமாக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 3200 கோடியில் எனக்குமட்டும் ரூ. 1000 கோடி தாருங்கள் என்று கேட்டால் நியாயமாகுமா? மக்கள் எல்லோரும் ஓட்டுப்போட்டு அண்ணுதுரை அவர்களை ஆட்சிக்குக் கொண்டுவந்தால், அவர் அங்கே போய் 14 ராஜ்யங்களுக்குரிய பங்கில் எனக்குமட்டும் 1000 கோடி கொடு என்று கேட்டால் அவர்கள் என்ன நினைப்பார்கள்? 'இவருக்கு என்ன மூளைக் கோளாறு?' என்றுதான் நினைப்பார்கள். தமிழ் நாட்டில் உள்ளவர்கள் புத்திசாலிகள் என்று இருந்தோமே, இப்படிப்

பட்டவர்களும் இருக்கிறுர்களே, என்று நினைப்பார்கள். (ஒரே கைதட்டல், ஆரவாரம்)

"எங்களுக்குத் தைரியம் உண்டு. நியாயமான பங்கைக் கேட்க பின்வாங்குவதில்லை. ஆகவே சென்னை ராஜ்யத்திற்காக ரூ. 291 கோடி பெற்றதில் ஏமாந்து போய்விட்டோமா, என்று பார்ப்போம். ஐந்தாண்டுத் திட்டதொகை இரண்டு வகையில் செலவழிக்கப்படும். ஒன்று ராஜ்யங்கள்மூலம்; மற்ருென்று மத்திய அரசாங்கம் நேரிடையாக திட்டங்களை எடுத்து நடத்தி அதன்மூலம் செலவழிப்பது. எல்லா ராஜ்யங்களுக்கும் ரூ. 3200 கோடி கொடுக்கவேண்டுமென்பது எல்லோரும் சேர்ந்து செய்த முடிவாகும். நமக்கு இதில் ரூ. 291 கோடி கிடைத்திருக்கிறது, ஜனத்தொகைப்படி பார்த்தாலும் நமக்கு அதிகம் கிடைத்திருக்கிறது. உத்திர பிரதேசத்தில்,—இவர்கள் சொல்லும் வடநாட்டிலே உள்ளது அது—ஜனத்தொகை நம்மைவிட அதிகம். அவர்களுக்கு ரு. 305 கோடிதான் கிடைத்திருக்கிறது. நேரு பிறந்த அந்த மாகாணத்தைவிட நமக்கு அதிகமான விகிதாசாரத்தில் கிடைத்திருக்கிறது. இதை எதற்குச் சொல்லுகிறேன் என்ருல் நாம் சரியான பங்கைத்தான் பெற்றிருக்கிருேம், ஏமாந்து போய்விடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டத்தான். இந்தப் பங்கோடு நாங்கள் நின்றுவிடமாட்டோம். இரண்டாவது திட்டத்தில் முதலில் போட்ட தொகைக்கு அதிகமாகவே செலவு செய்தோம். அதேபோல இதையும் பெருக்க வழி இருக்கிறது. ஆகையினுல் வஞ்சிக்கப்பட்டுவிட்டோம் என்று பேசுவது வெறும் பிரசாரத்திற்காகத்தான்.

" சர்வகட்சிக் கூட்டத்தில் சொன்னேன்—நான் முதல், இரண்டாவது திட்டங்களைத் தயாரிப்பதில் பங்கு கொண்டேன். மூன்ருவது திட்டத்திலும் பங்கு கொள்ளுகிறேன்; ஆகவே நிலைமை எனக்குத் தெரியும். இப்படிச் சொல்லி ரூ. 250 கோடிக்கு திட்டம் சொன்னேன். 'ஆனுல் மத்திய சர்க்காரிடம் போகும்போது ரூ. 400 கோடிக்கு திட்டம் போட்டுக்

கொண்டு போனுயே அது ஏன்?' என்று கேட்பார்கள். நான்மட்டுமில்லே, எல்லோரும் அதிகமான தொகைகளுக்குத் தான் போட்டுக்கொண்டு வந்தார்கள்; கேட்ட தொகை யாருக்கும் கிடைக்கவில்லை. ஆகவே நமக்குமட்டும் குறைவு என்று சொல்லுவது தவறு.

“பத்தாயிரம் கோடி திட்டத்தில் ரூ. 250 கோடிதாஞ என்று கேட்கிருர்கள். அதுவும் பித்தலாட்டமான பேச்சு தான். பத்தாயிரம் கோடி திட்டத்தில் தனியார் துறையும் சர்க்கார் துறையும் அடங்கியுள்ளன. சர்க்கார் துறையில் ரூ. 6200 கோடி; தனியார் துறையில் ரூ. 4000 கோடி; சர்க் கார் துறையில் குறிப்பிட்ட தொகை மத்திய சர்க்கார் மூல மாகவும் ராஜய சர்க்கார்கள் மூலமாகவும் செலவழிக்கப்பட இருக்கிறது. மத்திய சர்க்காருக்கான தொகையைக் கழித்துவிட்டால் ரூ. 3200 கோடி 14 ராஜ்யங்களும் திட்டப் படி செலவுசெய்ய வேண்டிய தொகையாகும். அதில் நாம் பெற்றுள்ள ரூ. 291 கோடி குறைவானதல்ல என்பது தெளி வாகத் தெரியவரும். இந்தத் தொகையில் தூத்துக்குடி, நெய்வேலி திட்டம் போன்றவைகளுக்குச் செலவிடப்படும் தொகை சேரவில்லை.

### *10. சேலம் இரும்புத் தொழிற்சாலே—உறுதிமொழி தருகி றேன்*

“சேலம் இரும்புத் தொழிற்சாலே விஷயமாக மேல்நாட்டு நிபுணர்களைக்கொண்டு, மேற்கு ஜெர்மனி கிழக்கு ஜெர்மனி முதலிய வெவ்வேறு தேசங்களிலிருந்து வரவழைத்துச் சோதனை செய்கிருேம். துரதிர்ஷ்ட வசமாக சேலம் இரும்பு கொஞ்சம் தரம் குறைவாக இருக்கிறது, நெய்வேலி நிலக் கரியும் முற்றவில்லே, பிஞ்சாக இருக்கிறது. நானும் முத லமைச்சரும் வடக்கே போயிருந்தபோது பிலாய், ரூர்கேலா முதலியவற்றைப் போய் பார்த்தோம்; அங்கு தரம் அதிக மாக இருக்கிறது; நிலக்கரி முற்றினதாக இருக்கிறது.

" இரும்பு விலையை முக்கியமாக நாம் கவனிக்கவேண்டும். அதிக விலை கொடுத்துச் செய்வதால் லாபம் இல்லை. நிலக்கரியின் தரத்தை உயர்த்தி சேலம் இரும்பை உருக்க முடியுமா? அதை நிர்ணயிக்க ஆராய்ச்சி நடத்த முடிவு செய்திருக்கிறோம். இது நமக்கும் தெரியாது; வடநாட்டாருக்கும் தெரியாது; இங்கிலாந்து ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைத்து அவர்கள் பார்த்துச் சொல்லவேண்டும். வடநாட்டு நிபுணர்கள் நம்மை ஏமாற்றி விட்டார்கள் என்று சொல்வதற்கு இடமில்லை. இந்தத்திட்டம் மேல்நாட்டு நிபுணர்களின் ஆராய்ச்சியைப் பொறுத்துத் தான் இருக்கிறது.

> **வெளிநாட்டு நிபுணர்கள் இது சாத்தியம் என்று கூறினால் நம்மைச்சேலத்தில் தொழிற்சாலை அமைக்காமல் தடுக்க உலகிலேயே யாரும் இல்லை.** இந்த உறுதி மொழியை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நிபுணர்கள் முடியும் என்று தீர்ப்பளித்துவிட்டால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு, என் பொறுப்பு, காங்கிரஸ் கமிட்டியின் பொறுப்பு; (பலத்த கைதட்டல்)

" அப்படியில்லை, சேலத்து இரும்பை எடுங்கள், கரி அடுப்பிலே போட்டு ஊதிக்காய்ச்சுவோம் என்றால் அதற்கு நாங்கள் தயார் இல்லை. (சிரிப்பு)

### *11. தொழில் துறையில் முன்னேற்றம்*

" வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் சென்னை ராஜ்யத்தில்தான் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும், அங்குதான் நன்றாக நடக்கும் என்று கூறுகிறார்கள். தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்ற கருத்துடன்தான் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் ரூ. 75 கோடி மின்சாரத்திற்காக

செலவழித்தோம். எதற்காக ? விளக்கு முதலியவற்றிற்கு பத்து சதவீதமும், விவசாயத்திற்கு பத்து சதவீதமும்போக, மீதி எண்பது சதவீதமும் தொழில்களுக்காகவே ஒதுக்கப் பட்டது. அதனை உபயோகிக்கும் அளவுக்குத் தொழில்கள், குறிப்பாகத் தனியார் துறையில் வளர்ந்துள்ளன. மூன்ருவது திட்டத்தில் மின்சாரத்திற்காக ரூ. 130 கோடி செலவு செய்ய இருக்கிருேம். இதை தி. மு. க. நண்பர்களுக்குச்சொல்லிக் கொள்ளுகிறேன்.

### *12. தேச பக்தர்களே! தமிழர்களே! தயவுசெய்து தீர்ப் பளியுங்கள்!*

" ஆகவே தமிழ் மக்கள் இதைத் தீர்மானிக்க வேண் டும். இப்போது நான் சொன்ன திட்டங்களெல்லாம் வேண் டாம், பொருளாதார முன்னேற்றம் தேவையில்லை என்று கருதி எங்களை ஓய்வெடுக்கச் சொன்னுல் அப்படியே தீர் மானம் செய்யுங்கள். நாங்கள் ஓய்வெடுக்கத்தயாராக இருக் கிருேம் ; நான் மந்திரி வேலையை விட்டு விட்டால் எனக்கு நிறைய வரும்படிகூட கிடைக்கும் (சிரிப்பு).

" ஆனுல் அப்படி தீர்மானித்துவிட்டால் சுதந்திரக்கட்சி தனியாக ஆட்சி நடத்துமா ? நடத்த முடியும் என்று சொல்ல அவர்களுக்கே தைரியம் உண்டா ? அல்லது மூன்று கட்சி களைச் சேர்ந்த மந்திரிகள் மூன்று வெவ்வேறு மூலைகளில் இழுக்க ஆட்சி ஒழுங்காக நடைபெறுமா ?

ஆகவே, தீர்க்கமாக சிந்தனை செய்யுங்கள்; ஸ்திரமான உறுதியான ஆட்சி தொடர்ந்து அமைந்திட காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள். (இரண்டு நிமிட நேரம் பலத்த இடை யருத கைதட்டல்)

" அவர்களுக்கு ஓட்டுப் போட்டால் குழப்பம் வளர்ச்சி யடையும் ; அறிவு வளர்ச்சியடையாது. பத்து வருடங் களுக்கு மேல் இவர்களைப் பார்த்தாகி விட்டதே, வேறுபார்க்க லாமென்ருல் குழப்பம் வருவதைத் தவிர்க்க முடியாது.

" குழப்பம் வேண்டுமென்று தாய்மார்கள் விரும்புகின்றீர்களா? திட்டம் ஒழுங்காக நிறைவேற வேண்டுமா? மறுபடியும் காங்கிரசை ஆட்சியில் வைத்தால்தான் முடியும்.

" தூத்துக்குடி, சேதுசமுத்திரம் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் விஷமம் செய்ய விரும்புபவர்கள் ஐந்தாண்டுத் திட்ட கண்டன வாரம் போடுகிறார்கள். ஆம், அவர்கள் **கண்டனத்திற்குத் திட்டம் போடுகிறார்கள்** (சிரிப்பு). திட்டத்திற்கு ஒத்துழைப்பு தாருங்கள் என்று கேட்டால் நண்பர் விநாயகம் அவர்கள் சொன்னாற் போல முதற் கூட்டத்திற்கு வராமல், அடுத்த கூட்டத்திற்கு வந்து, தொடர்ந்து வராமல் திரு. கருத்திருமன் அவர்கள் என்னமோ சொன்னார் என்று, நாங்கள் வரமாட்டோம், என்று சொல்லி விட்டார்கள். குழந்தைகள் விளையாடிக் கொண்டேயிருக்கும் போது, திடீரென்று கோபம் கொண்டு எனக்கு வேண்டாம் போ என்று சொல்லி விளையாட்டுச் சாமானை எறிந்து போவதில்லையா, அதுபோலத் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களும் நடந்து கொண்டார்கள். **இந்த அரசியல் குழந்தைகளிடம் திட்டப் பொறுப்பை விடுவது ஆபத்து.** அவர்களுக்குப் பொறுப்பு கிடையாது, கண்டன வாரம் கொண்டாடுவதைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்குச் சாத்தியமில்லை. ஆகவேதான் காங்கிரசை ஆதரிக்கும்படி கேட்கிறோம்,

"தமிழ்மக்களைக் கேட்கிறோம்—உயர்வு வேண்டும் என்று நினைக்கின்றீர்களா? தொழிற் கல்வி விரும்புகின்றீர்களா? அப்படியானால் வேறு வழி இல்லை. காங்கிரசைத்தான் ஆதரிக்க வேண்டும்.

" நாட்டின் முன்னேற்றத்திற்காக, நாட்டின் வளர்ச்சிக்காக, தொடர்ந்து நல்ல சக்தியை நாட்டில் உண்டாக்கத் தான் இந்தத்தீர்மானம் உங்கள் முன்னாலே விவாதிக்கப்படுகிறது.

அச்சக்தி, போதுமான பலம், வந்த பிறகு
வேண்டுமென்றால் வேறு வைத்தியரை வைத்துக்

கொள்ளலாம். இப்போது அப்படி செய்ய முயன்ருல் அது விஷப்பரீட்சையாக முடியும்; நல்ல வைத்தியன் யார் என்பது பத்து வருஷங்களில் முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

"ஆகவே நீங்கள், குறிப்பாகத் தாய்மார்களே, உங்களுடைய பூரண ஒத்துழைப்பைக் காங்கிரசுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்! (பலத்த கைதட்டல்)

# விறலினைக் காட்டுவோம்! விளைச்சலைப் பெருக்குவோம்!!

## எம். பக்தவத்சலம்

### 1. காங்கிரஸ் மகாசபைக்கு விவசாயிகளிடம் அக்கறை உண்டு

"தலைவர் அவர்களே! தமிழ்நாடு பூராவிலுமிருந்து வந்துள்ள காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களே, ஊழியர்களே, இந்தத்தீர்மானம் விவசாய சம்பந்தமானது. நம் மக்களுடைய சராசரி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே நமது இலட்சியம். விமரிசையாக நடத்தப்படும் இந்த மகாசபைக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் இந்தத் தீர்மானம் மிக முக்கியமானது என்று சொல்வேன்.

"விவசாயிகளுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் என்ன சம்பந்தம் என்று சிலர் நினைக்கக்கூடும். **காங்கிரஸ் மகாசபை ஆரம்ப காலத்திலிருந்து விவசாயிகளோடு தொடர்பு கொண்டு வந்திருக்கிறது.** தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியானாலும் சரி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியானாலும் சரி, கூடுகின்ற போதெல்லாம் விவசாயத் தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். நமது இயக்கம் சுதந்திரப் போராட்டக் காலத்தில் கூட அரசியல் விவகாரத்தில் மட்டும் கவனம் செலுத்த வில்லை. மகாத்மா காந்தி தலைமை ஏற்ற பிறகு பல்வேறு பிரச்னைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன; கதர் இயக்கம், கிராமத்தொழில், முதலியவற்றில் கவனம் செலுத்த ஆரம்பித்தோம். சுதந்திரம் பெற்ற பிறகு இன்னும் அதிகமாக கவனம் செலுத்துகிறோம். ஆகவே காங்கிரஸ்

கட்சிக்கு விவசாயிகளிடம் உள்ள அக்கறையை எவரும் மறுக்க முடியாது.

*2. காங்கிரசின் திட்டம் என்ன?*

"**நம்முடைய லட்சியம் மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது என்று சொன்னேன்.** அதுவே திட்டக் கமிஷனின் வேலை; ஆட்சிப்பொறுப்பிலே இருக்கின்றவர்களது வேலை; காங்கிரசின் வேலையும் கூட. நமது இயக்கம் பிறந்து 75 ஆண்டுகள் ஆகின்றன. அடுத்த மாதம்வைரவிழா கொண்டாடப்போகிறோம் என்பதைத் தலைவர் அவர்கள் பேசுகின்ற போது குறிப்பிட்டார். ஒரு புறத்தில் காங்கிரசை ஒழிக்க வேண்டும் என்று ஒரு சிலர் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு வேறொன்றும் காரணம் இல்லை, மக்கள் நம்மீது கொண்டுள்ள அளவு கடந்த அபிமானத்தைக் கண்டு ஏற்பட்ட பொறாமையின் விளைவுதான் அது. அதனால் நாமோ அல்லது மக்களோ தளர்ந்து விடப்போவதில்லை. காங்கிரசுக்கு 50 வருஷங்கள் பூர்த்தியானபோது பொன் விழா கொண்டாடினோம். 60 வருஷங்கள் ஆனபிறகு சுதந்திரம் பெற்றோம்; இப்போது 75-ஆவது ஆண்டினை வைரவிழாவாகக் கொண்டாடப்போகிறோம். அத்தகைய பெருமையும் பழமையும் வாய்ந்த காங்கிரஸ் மகாசபையின் திட்டம் என்ன? மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான்.

*3. உணவு உற்பத்தி: இரண்டு சிக்கல்கள்.*

"மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்த அடிப்படையாக விளங்குவது, நம் நாட்டைப் பொறுத்த வரையில், விவசாயமாகும். எனவே விவசாயத்தில் போதிய கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் அது தொழில், விவசாயத் துறைகளில் முன்னணியில் இருக்கிறது; அவர்கள் தேவைக்கு மேலே ஏராளமாக உற்பத்தி செய்கிறார்கள். இங்கு 100க்கு

70 பேர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தும் உற்பத்தி மிகவும் குறைவாக இருக்கிறது. அங்கு 100க்கு 12 பேர்கள் தான் விவசாயம் செய்கிறார்கள் என்றாலும் மிக ஏராளமாக உற்பத்தி செய்கிறார்கள். ஆராய்ச்சிகள் செய்து இன்னும் அதிகம் பெருக்குவது எவ்வாறு என்று கவனம் செலுத்தி வருகிறார்கள்.

"நமக்குள் சில சிக்கல்களைப் பார்ப்போம். இந்தியாவில் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது; 100 க்கு 2 பேர்கள் வீதம் வருடா வருடம் பெருகிக்கொண்டு வருகிறோம்.

"இதற்கு என்ன காரணம்? நம்முடைய ரெவின்யூ மந்திரி அவர்கள் ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த முயற்சி செய்து வருகிறார். (இலேசான கைதட்டல்) அவர் வெற்றி பெறுவார் என்பதில் ஐயமில்லை. (பலத்த கைதட்டல்) இது ஒரு உலக பிரச்னை. ஜனத்தொகை சில நாடுகளில் அதிகம், சில நாடுகளில் குறைவு. குறைவாக இருக்கும் நாடுகளில், அதிகம் பிள்ளைகள் பெற்றால் பரிசு கூட கொடுக்கிறார்கள். இப்படி நாட்டிற்கு நாடு ஜனத்தொகையை ஒட்டி இந்தப் பிரச்னை வேறுபடுகிறது.

"இந்தியாவிலே அதிகமான மக்கள் இருக்கிறார்கள். எந்த திட்டம் போட்டாலும் மக்கள் தொகையைப்பார்த்துத் தான் போடவேண்டும். வேலூர், வடாற்காடு, தமிழ்நாடு என்றெல்லாம் மக்களைக் கணக்கெடுத்துக்கொண்டு திட்டம் போடுகிறோம். ஆனால் திட்டகாலத்திற்குள் ஜனத்தொகை பெருகிவிடுகிறது. அதுதான் பிரச்னை.

"அடுத்த படியாக சராசரி வயதும் இப்போது கூடி விட்டது. நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இரண்டு காரியங்கள் செய்கிறார்—ஒருபக்கம் மக்கள் அதிகமாகப் பிறப்பதை குறைக்கிறார்; இன்னொரு பக்கம் சீக்கிரமாக இறப்பதையும் குறைக்கிறார். அவருடைய சுகாதார

இலாகாவின் மூலம் வசதிகள் கொடுத்து சராசரி வயதை அதிகரித்து வருகிறார். நான் படிக்கும்போது இந்தியாவில் சராசரி வயது 22 என்று இருந்தது. இப்போது அது இரண்டு மடங்கிற்கு மேல் கூடிவிட்டது. இதனால் நம்முடைய பிரச்னை கஷ்டமாகிறது என்று சொன்னாலும் மக்களைத் திடகாத்திரமாக இருக்க ரெவின்யூ அமைச்சர் அவர்கள் வழிவகுத்து வருவதால் அவரைப் பாராட்ட வேண்டியது தான்.

### 4. விவசாயத்துறையின் வளர்ச்சியோடு தொழில்துறையின் வளர்ச்சி இணைந்துள்ளது.

" நாம் தொழில் துறையிலும் வளர்ச்சி பெற்று வருகிறோம். அதனுடைய அவசியத்தைப் பற்றி நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 70 சதவிகிதத்தில் கொஞ்சம் குறைப்பது நல்லது தான். ஆனால் அப்படி செய்வது, தொழில் வளர்ச்சியை ஒட்டியது. விவசாய சம்பந்தமான தொழில்களை ஏற்படுத்த (Agro-industries) முயற்சி செய்து வருகிறோம். பூமியில் விளைவதை ஒட்டித்தான் பல தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக கரும்பு நன்றாகப் பயிரானால் தான் சர்க்கரை ஆலைகள் தோன்றமுடியும்; பருத்தி நன்கு விளைந்தால் தான் பெரிய நெசவாலைகள் ஏற்படமுடியும். அதே போல காகிதத் தொழிற்சாலை அமைவதற்கு மூங்கில் அவசியமானது. இப்படி விவசாயத்தின் வளர்ச்சியில் தொழில் துறையின் வளர்ச்சி இணைந்திருப்பதைப் பார்க்கிறோம். கனரகத் தொழிலுக்கு வேண்டிய உலோகங்கள் கூட பூமியிலிருந்து தான் கிடைக்கின்றன. எனவே விவசாயத்தில் போதிய கவனமும், அக்கறையும் செலுத்தினால் தான் தொழில் துறை வளர்ச்சி அடையும்.

" சுதந்திரப்போராட்டக் காலத்தில் காங்கிரஸ் இதை வற்புறுத்தியது. ஆனால் அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் இதைப்பற்றி கவனிக்கவில்லை. அதன் விளைவாக நாம்

அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டவுடன் உணவுப் பஞ்சம் தலைதூக்கியது. அதைச் சமாளித்து, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் ஈடுபட்டோம்.

### 5. சலியாது உழைத்தோம்; சாதனைகள் கண்டோம்

"முதல் ஐந்தாண்டுத்திட்ட ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி 31 லட்சம் டன்னாக இருந்தது; முதல் ஐந்தாண்டுத்திட்டம் முடிந்தபோது 44 லட்சம் டன்னாக ஆயிற்று. அதாவது 13 லட்சம் டன் உயர்வு. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவில் ஆண்டொன்றுக்கு 52 லட்சம் டன் உற்பத்தி செய்யும் நிலைமையில் இருக்கிறோம். இப்போது பரவாயில்லை. இங்கிருந்துவெளியேகூட வேறு மாகாணங்களுக்குச் சென்று விற்பனை செய்கிறார்கள். வெளியே போகிறதே என்று சிலர் குழப்பத்தை உண்டாக்கப்பார்க்கிறார்கள். அதில் அர்த்தமில்லை. விவசாயி விளைபொருள்களை எப்படியும் விற்றுத்தானே தீரவேண்டும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்போதுள்ள உற்பத்தியை 30 சதவிகிதம் பெருக்கவேண்டும்; அதாவது 67 லட்சம் டன்னாக மொத்த உற்பத்தியை ஆக்கவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். அதாவது 15 லட்சம் டன் அதிகம். அதைச் செய்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. உற்பத்தி அதிகமானால் விவசாயிகளுக்குத்தான் லாபம். ஆனால் மிகவும் விலை அதிகமானால் தவறு. அப்படி ஆகாமலிருப்பதுதான் விவசாயிக்கே நல்லது.

> விவசாயி தனக்குக் கட்டுபடியாகாத விலைக்கு விற்கவேண்டும் என்று இல்லை; விவசாயி நஷ்டமடையும் அளவிற்கு அரசாங்கம் கொஞ்சமும் விட்டுவிடாது.

"உண்மையில் லாபம் விவசாயிக்குக் கிடைக்காமல் வேறுவிதத்தில் போகிறது. விலைக் கட்டுப்பாட்டை எடுத்து

விட்டோம்; கொள்முதல் செய்வதையும் துணிந்து விட்டு விட்டோம், மத்திய அரசாங்கத்தைக் கேட்டு வாங்கலாம் என்று. அவர்கள் கொடுக்கவேண்டுமென்று இல்லை; இருந் தாலும் கண்டிப்பாகப் பெறுவோம்.

6. *ரஷ்யா சென்றுவந்த பிறகு நான் மாறிவிட்டேனும்: சுத்தப் பொய்!*

"உற்பத்தியை எப்படி பெருக்குவது? அதற்கு கூட் டுறவு சாதனங்கள் மிகவும் ஏற்றவை. இது ஒன்றும் புதிய தல்ல. வார்த்தைகள் வேண்டுமென்ருல் புதியதாக இருக்க லாமே தவிர இது தொன்றுதொட்டு வருகிறது. இதைக் கேட்டு சிலர் ஏதோ ஆபத்து என்று பிரசாரம் செய்கிருர் களே, அது தப்பு.

"ஒரு சுதந்திரக் கட்சி மேதாவி திருநெல்வேலியில் என் னைப்பற்றி பேசினுராம், 'ரஷ்யா போய்விட்டு வந்தபின் என் புத்தி மாறிவிட்டதாக!"

"ரஷ்யாவைப் பார்த்தபிறகு நான் என்ன மாறிவிட் டேன்? ரஷ்யாவில் விவசாயத்திலுள்ள ஜனங்கள் குறைவு, அங்கு கூலி ஆள் மாதிரி சம்பளம் கொடுத்துப் பண்ணை நடத்துகிருர்கள். விவசாயி தன்னிஷ்டம்போல் விவசாயம் செய்ய முடியாது. அவர்கள் சொல்லுகிறபடிதான் விவ சாயம் செய்யவேண்டும். டிராக்டர் டிரைவருக்கு ஒரு சம்ப ளம், உழவருக்கு ஒரு சம்பளம், இப்படி பல வேறுபாடுகள்; இதனுல் உற்சாகம் இல்லை என்று கண்டு, அந்தக் கூட்டுப் பண்ணை முறை நமக்குப் பயன்படாது என்று சொன்னேன். ஆனுல் அவர்களுடைய விஞ்ஞான முறையைப் பின்பற்ற லாம்.

"இன்னெரு இடத்தில் பேசும்போது பயிரிடாமல் வீணுக உள்ள நிலத்தை விவசாயம் செய்ய முடியுமானுல் பயன்படுத்தலாம், கூட்டுறவு முறையிலே என்று சொன் னேன். சற்று முன்பு திரு. சாம்பசிவ ரெட்டியார் அவர்கள்

பேசினுரே, அவருடைய ஊரான ஆத்தூரில் (சேலம் ஜில்லா) அப்படிப்பட்ட நிலம் இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து, ஐந்து, ஐந்து ஏகராவாகப் பிரித்துக் கொடுத்துப் பார்த்தோம்; இப்போது கொஞ்சம் பயன்படுகிறது. நாம் கூட பெரிய கூட்டுறவு பண்ணை முறையை நடத்தலாம், பெரிய, பரப்பாக பத்தாயிரம் ஏகராவாக இருந்தால், என்று யோசனை சொன்னேன்; (Mechanised Farm) என்பார்களே, அதைத்தான் நான் பிரஸ்தாபித்தேன். இதை வேறு விதமாக திருத்திச் சொல்லி, என் புத்தி கெட்டுவிட்டது என்று அந்த மேதாவி சொன்னுராம்! (சிரிப்பு)

### *7. பயிர் உற்பத்தியைப் பெருக்குவதில் பஞ்சாயத்துகளின் அக்கறை*

"பஞ்சாயத்து சட்டம் செய்ததே முக்கியமாக விவசாய உற்பத்தி உயர்வுக்குத்தான். அதில் பொறுப்பேற்றுள்ள புதிய தலைவர்கள் இந்தப் பிரச்னையில் நிறைய அக்கறை காட்டுகிருர்கள். நாமும் அவர்களுக்கு உறுதுணையாக நிற்கிரும். துணை செய்வது என்ருல் ஊர் நிலத்தை எடுத்துக் கொள்வது, அல்லது பிடுங்கிக்கொள்வது என்று அல்ல. விவசாயிக்குத் தேவையான சாதனங்களை அளிப்பதற்குத் தான் நாம் முன்வருகிரும். விவசாயத்திற்கு முக்கியமானவை, நிறைய தண்ணீர், நல்ல விதைகள், நல்ல உரம், ஆகியவைதான். இவற்றையெல்லாம் காங்கிரஸ் ஆட்சி செய்து தருகிறது. விதை, உரம் முதலியவற்றைக் கூட்டுறவு மூலம் தருகிரும். ரசாயன உரமும் விவசாயத்திற்கு மிக முக்கியமாகும். அதை மற்ற நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்தும் குறைந்த விலையில் கொடுத்தும் வருகிரும். நாமே ரசாயன உரம் உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்கான முயற்சிகளையும் செய்து வருகிரும்.

"நாம் நல்லது செய்வதைப் பொறுக்காமல் எதிர்க்கட்சியினர் மண்ணைத் தூவுவார்கள். இந்த இடத்தில்தான் காங்

கிரசின் பொறுப்பைத் தெரிந்து கொள்ளவேண்டும். இதைத் தான் இந்தத் தீர்மானமும் குறிப்பிடுகிறது. விவசாயிக ளோடு சிறந்த தொடர்புகொள்ள இந்தத் தீர்மானம் வழி காட்டுகிறது.

### 8. விவசாயிகளுக்கு நன்றி செலுத்துவோம்

"நமது விவசாயிகளுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். அவர்கள் பல கஷ்டங்களுக்கு இடையே உற்பத்தியைப் பெருக்கி, நம்பிக்கையோடு நிற்கிறார்கள். அவர்களுக்குக் காங்கிரசார் துணை நிற்கவேண்டும். இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தைக் கிராமங்களில் எடுத்துச் சொல்லவேண் டும்.

" மிக முக்கியமான இந்தத் தீர்மானத்தை உங்க ளுடைய பூரண ஒத்துழைப்புடன் நிறைவேற்ற வேண்டு மென்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். உங்களைக் கண்டு பேச வாய்ப்பு கிடைத்ததற்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். (பலத்த கைதட்டல்)

# பங்களாவில் அமைதி நிலவினுல் போதுமா? பஞ்சை,பராரிகள் வாழ்வு உயரவேண்டாமா?

## கே. காமராஜ்

### 1. புதிய தலைவரின் திறமையைப் பாராட்டுவோம்!

"அன்புள்ள தலைவர் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! வேலூரில் நாம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிருேம். பல வருடங்களுக்கு முன்னுல் இதே வேலூரில் நமது மாகாண மகாநாட்டை நடத்தினேம்; அந்த மகாநாடு தேர்தலுக்கு முன்னுல் நடந்தது; அதே மாதிரி இப்போதும் தேர்தலுக்கு முன்பாக நல்ல முறையில் இதைக் கூட்டியிருக்கிருேம்.

"கடந்த வருஷத்தில் காங்கிரஸ் நல்ல முறையில் செயல்படத் தொடங்கியது. அதற்குக் காரணம் எதிர்க்கட்சிகள் என்று சொல்லுவேன். அவர்கள் அதிகமாக பிரசாரம் செய்ய ஆரம்பிக்கவே, நாமும் வேலே செய்யத் தொடங்கினேம். சென்ற ஒரு வருஷ காலமாக ஸ்ரீ அளகேசன் அவர்கள் தலைமை ஏற்ற பிறகு தமிழ்நாடு பூராவும் நிறைய மகாநாடுகளை, பழைய காலம் மாதிரி, நடத்திவருகிருர். ஜில்லா, தாலூகா என்று பல மகாநாடுகளை நடத்தி ஒரு உற்சாகத்தை உண்டாக்கி இருக்கிருர். அதற்காக அவருக்கு நமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"அந்த உற்சாகத்தின் காரணமாக இங்கே கூடியிருக்கின்ற கூட்டத்தைப் பார்க்கின்றபோது, இதைக் கமிட்டி

என்று சொல்வதா அல்லது மகாநாடு என்பதா, என்றே தெரியவில்லை.

## 2. சுதந்திரப்போரில் தாய்மார்களின் பங்கு

"இங்கு நல்ல முறையில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நிறைய கூட்டத்தைப் பார்க்கிறோம்; அதிலும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுடன் ஏராளமாக வந்திருக்கிறார்கள். இதிலிருந்து நாட்டு முன்னேற்றத்திற்காக நாம் போடும் திட்டங்களில் தாய்மார்களுக்குள்ள அக்கறை தெரிகிறது.

"விடுதலைப் போராட்ட காலத்தில் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக நடவடிக்கைகளில் தாய்மார்கள் அதிகம் கலந்து கொண்டார்கள். அவரை, "ஏன் நீங்கள் தாய்மார்களை அதிகமாக தேடுகிறீர்கள்" என்று கேட்டதற்கு அவர், "சாதாரணமாக ஆண்களைச் சேர்த்தால், சேர்க்கின்ற அளவுக்குத்தான் ஆதரவு கிடைக்கும்; ஆனால் ஒரு பெண் மணியைச் சேர்த்தால் ஒரு குடும்பமே என் பின்னால் வருமே!" என்று கூறினார். அது முற்றிலும் உண்மை.

"ஆகவே இந்த மகாநாட்டிற்குத் தாய்மார்கள் ஏராளமாக வந்திருக்கிறார்கள் என்றால் மிகவும் சந்தோஷப்படுகிறோம். அன்றைய தினம் காந்தியோடு, அவரது தலைமையின் கீழ் நின்று சுதந்திரப் போராட்டம் வெற்றிபெற தாய்மார்கள் மிகவும் உதவினார்கள். இன்றைக்கும் தாய்மார்களைத்தான் மிகவும் நம்புகிறோம். (தாய்மார்களைப் பார்த்து) இந்த மகாநாட்டிற்கு நீங்கள் ஏராளமாக வந்திருக்கிறீர்கள்; நீங்கள் வந்ததுபற்றி ரொம்ப சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் தான் காங்கிரஸ் வளர பாடுபட வேண்டும்! (தாய்மார்கள் பகுதியில் உற்சாகமான கை தட்டல்)

## 3. இந்தியா வாழ்ந்தால்தான் தமிழகம் வாழும்!

"இரண்டு நாட்களாக முக்கியமான விஷயத்தைப்பற்றி இங்கே பேசி வந்திருக்கிறோம்; உணவு உற்பத்தி, விவசாயம்

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் போன்ற முக்கியமான தீர்மானங்களை விவாதித்து நிறைவேற்றி இருக்கிறேம். இவை நடைமுறைக்கு வந்து நாடு முன்னேற்றம் அடைய ஒற்றுமை மிகவும் அவசியம்.

கன்னியாகுமரி முதல் காசி வரை, ஏன் காஷ்மீரம் வரை, இது நமது நாடுதான், நாம் எல்லோரும் இந்தியர்கள் என்ற உணர்ச்சி வேண்டும். தமிழன் என்று சொல்லுவதில் பெருமை கொள்ளலாம்; ஆனுல் இந்தியன் என்ருல் இன்னும் அதிகமான பெருமை கொள்ள வேண்டும். இந்தியா வாழ்ந்தால்தான் தமிழ் நாடு வாழும். அதில் மோதல் ஏற்பட்டால் திட்டத்திற்குத் தடை உண்டாகும்.

"இப்போதே இந்த மாகாண உணர்ச்சி, குறுகிய உணர்ச்சி, சிறிது சிறிதாக தலை தூக்குகிறது. மலையாளிகள் தண்ணீர் கொடுக்கவில்லை, ஆந்திரர்கள் கோதாவரி நீரை விடவில்லை என்று பத்திரிகைகளில் எழுதுகிருர்கள்; குழப்பம் ஏற்படுத்தப் பார்க்கிருர்கள்.

## 4. பூசலுக்குக் காரணம் சுயநல உணர்ச்சிதான்!

"இதற்கெல்லாம் பிற மாகாணங்கள்தான் காரணம் என்று சொல்லி, துவேஷம் உண்டாக்கப் பார்க்கிருர்கள். இது தவறு. நீங்களே உங்கள் ஜில்லாவிற்கு அணைக்கட்டு வேண்டுமென்று கேட்பீர்கள், கட்டுவதற்கான உத்திரவு தரப்பட்டதும், "என்னுடைய ஊருக்குத்தான் அதிக நீர் உபயோகமாக வேண்டும்" என்று ஒவ்வொரு ஊரைச் சேர்ந்தவர்களும் கேட்க ஆரம்பித்து விடுவீர்கள். ஆகவே இதுபோன்ற பூசலுக்குக் காரணம், 'தங்களுக்கு வேண்டும்,' என்ற எண்ணம்தானே தவிர இது மலையாளத்தான் பிரச்னையோ, மராட்டியனின் பிரச்னையோ அல்ல! சொல்லப் போனல் சொந்த மச்சான் மாப்பிள்ளைமார்களுக்கே தரமாட்டேன் என்று சண்டை போடுகிறேம் அல்லவா? மக்களுக்கு,

தமக்கு நிறைய வேண்டும், என்ற எண்ணம் இயற்கையாகவே இருக்கிறது. இதை வளர்க்க எதிர்க்கட்சிக்காரர்கள் முயலுகிறார்கள்.

### 5. கம்யூனிஸ்ட் கட்சியின் கைங்கரியங்கள்

கம்யூனிஸ்ட் கட்சியை எடுத்துக்கொள்வோம். அஸ்ஸாமில் தகராறு, வங்காளிகளிடமும் சென்று, அஸ்ஸாமியர்களிடமும் சென்று, இரண்டு பக்கங்களிலும் தகராறு மூட்டுவார்கள். குறுகிய மொழி உணர்ச்சியை உண்டாக்கி எல்லா ராஜ்யங்களிலும் குழப்பம் உண்டாக்குவார்கள்; இது தான் அவர்களது இலட்சியம். குழப்பம் ஏற்படுத்தி மத்திய அரசாங்கத்தை பலவீனப்படுத்தி ஆட்சியைப் பிடிக்க முயற்சி செய்வார்கள்!

அவர்கள் ஆட்சிக்கு வந்தால் பார்லிமெண்ட், சட்ட சபை ஆகியவற்றைக் கலைத்து விடுவார்கள். கேரளாவில் என்ன நடந்தது? அரசாங்கத்தை வைத்து தங்களுடைய கட்சியை வளர்க்க முயன்றார்கள். நாம் அவர்கள் ஐந்து வருஷம் ஆள வேண்டும் என்றுதான் விரும்பினோம்; அப்போதுதான் மக்கள் அவர்களைப் புரிந்துகொள்ள முடியும், என்று கருதினோம். ஆகவே நம்மாலே அவர்களுக்கு இடைஞ்சலே இல்லை. வீண்பழி சொல்லுவார்களே என்று பயந்து, காங்கிரஸ் அரசாங்கங்களைவிட அவர்களுக்கு அதிகமான சலுகைகளை மத்திய அரசாங்கம் கொடுத்தது; சர்வ ஜாக்கிரதையாக எல்லாவிதமான உதவிகளையும் செய்தோம்.

**ஆனால் அவர்கள், நான் சொன்னது போல, ஆட்சியை வைத்துக் கட்சியை வளர்க்க எண்ணினார்கள்;**

அதாவது சர்வாதிகாரப் பாதையில் செல்ல ஆரம்பித்தார்கள்.

"மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் விபரீதமான போக்கைக்கண்டு கொதித்து எழுந்தார்கள்; கேரளம் பூராவும் மக்கள், அவர்களுடைய ஆட்சி வேண்டாமென்று போராடி

ஞர்கள். அந்தப் போராட்டத்தில் காங்கிரஸ் சேர்ந்ததா? இல்லையே: ஆனாலும் மக்கள் சக்தியின் முன்பாகக் கம்யூனிஸ்ட் ஆட்சி நிற்கமுடியாமல் விழுந்து விட்டது.

### 7. தி. மு. கழகத்தின் இலட்சியம் என்ன?

கம்யூனிஸ்ட்டுகள் ஒரு பக்கம் என்றால், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் இருக்கிறது. அவர்களுக்குக் கொள்கையே கிடையாது (ஒரே சிரிப்பு) என்ன கொள்கை யிருக்கிறது? கேட்டால் சொல்லுவார்களா? ஒரே ஒரு கொள்கை, வடநாடு வேறு தென்னாடு வேறு, என்பார்கள். இதில் ஏதாவது உண்மையிருக்கிறதா? எப்படி வேறு வேறு இனம் என்று கேட்டால், மொழியைக் காட்டுகிறார்கள்; அவர்கள் வேறு மொழி பேசுகிறார்களாம், நாம் வேறு மொழி பேசுகிறோமாம்! இதுவாவது உண்மையா?

" வடக்கே எல்லோரும் ஒரு மொழியா பேசுகிறார்கள்? வங்காள மொழி, இந்திமொழி, சிந்தி மொழி, குஜராத்தி மொழி, பஞ்சாபி மொழி இப்படி பல மொழிகள் அங்கே உள் ளன. அதேபோல தெற்கில் கன்னடம், தெலுங்கு, மலை யாளம் முதலிய பல மொழிகள் உண்டு. இவர்கள் மொழி அடிப்படையில் நாட்டைப் பிரிக்க விரும்பினால், இவர்கள் கோரும் திராவிடஸ்தானிலிருந்து தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசுபவர்களை நான்கு நாடுகளாகப் பிரிக்க வேண் டும். இது முடிகிற காரியமா? நாலு மொழி பேசினாலும் ஒரு இனம் என்கிறார்கள்; எப்படி ஓரினம் ஆகும்? இதைக் கேட்டால் நம்மைத் திட்ட ஆரம்பித்து விடுவார்கள்! (சிரிப்பு) அவர்களிடத்தில் வேறு ஒரு கொள்கையும் இல்லை.

### 7-எ. முன்பு சிரித்தவர்களைக்கண்டு இப்போது நான் சிரிக் கிறேன்!

" இந்த இலட்சணத்தில் நம்முடைய கொள்கையை இவர்கள் கிண்டல் செய்கிறார்கள். அதற்கு இவர்களுக்கு

அருகதை உண்டா என்று கேட்கிறேன்! நம்முடைய இலட்சியம் தெளிவானது; முன்பு சுயராஜ்யம் பெறுவது நம்முடைய கொள்கையாய் இருந்தது.

> இப்போது வித்தியாசம் இல்லாத சமதர்ம சமுதாயம் ஏற்படுத்த வேண்டுமென்பது நம்முடைய இலட்சியம்.

'இது எப்படி நடக்கும்?' என்று கேட்கிறார்கள். முன்பும் அப்படித்தான் கேலி பண்ணினார்கள்! மகாத்மா காந்தி சுயராஜ்யம் என்று கேட்கிறாரே, எங்கே கிடைக்கப் போகிறது, என்றார்கள்; என்னையே, "என்னையா, காந்தி பின்னால் சுற்றிக் கொண்டிருக்கிறாயே, உனக்கு வேறு வேலை கிடையாதா; நீ என்ன சாதிக்கப் போகிறாய்" என்று கேட்டார்கள். மகாத்மா காந்தி சமுதாயத்தில் கீழே இருப்பவர்களைத் தூக்கிவிட வேண்டுமென்று தீர்மானம் போட்டபோது அப்படித்தான் கிண்டல் செய்தார்கள். நூல் நூற்றால் சுதந்திரம் வருமா, கதர் கட்டினால் சுதந்திரம் கிடைக்குமா, என்றும் சொன்னார்கள். அப்படியெல்லாம் சொன்னவர்கள் வெட்கம் அடையும்படியாக நமக்குச் சுயராஜ்யம் வந்து விட்டதல்லவா. ஆகவே இப்போது நம்மை "சமதர்ம சமுதாயத்தை உங்களால் நிறுவ முடியுமா?" என்று கிண்டல் செய்பவர்களைப்பார்த்து நான் சிரிக்கிறேன். முடிவில் வெற்றி நமக்குத்தானே!

## 9. புதிய கட்சி சொல்லுகின்ற புளித்துப் போன கொள்கை

"இத்தகைய கேலி செய்வதில் பெரிய கட்சியாக சுதந்திரக் கட்சி விளங்குகிறது. அந்தக் காலத்திலிருந்ததைப் போல் அதே நிலையில் இருக்க வேண்டும், என்பது அவர்களது வாதம். இந்த அழகான கொள்கையை வைத்துக் கொண்டு நம்மைக் கேலி செய்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் விபரம் புரிந்தவர்கள்; கேலியால் அவர்கள் மாறிவிட

மாட்டார்கள். நம்முடைய கொள்கையை உடைக்க வேண்டு மென்பது அவர்களுடைய ஆசை. அதற்காக கம்யூனிஸ்டு கள்கூட கூட்டு சேருகிருர்கள்.

கம்யூனிஸ்டுகளுக்கு யாருடன் கூட்டு சேரு வது என்பது பற்றிக்கவலையில்லை; எப்படியாவது தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள வேண் டுமே என்பதுதான் அவர்களது கவலை. ஜெர்மனி யில் புரட்சி செய்து ஹிட்லர் வந்தார்; முதலாளி கள் அவர் பின்னுல் சென்ருர்கள்; ஏனென்ருல் நாடு பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. அதே போலத்தான் இவர்களும்!

"காங்கிரஸ் தவருன வழியில் செல்லுகிறது, என்று சொல்லுகின்ற சுதந்திரக் கட்சி என்ன வழியில் போகிறது? நாட்டைப்பற்றி கவலைப்படாமல் பணக்காரர்களது ஆதிக் கத்தை நிலை நிறுத்தப் பார்க்கிருர்கள்.

*9. ஏற்றமுடையவர் யாரென்று எடைபோட்டுப்பார்ப்போமா?*

"காங்கிரசைப் பழி கூறுகிருர்களே, யார் நாணயமான வர்கள் என்று பரிசோதித்துப் பார்ப்போமா?

எடைபோட்டுப் பார்க்கட்டும்; உறைத்துப் பார்க்கட்டும்; நான் தயாராக இருக்கிறேன். ஊழி யர்களா அல்லது தலைவரோ, யார் வேண்டுமானு லும் வாருங்கள் (கைதட்டல்) ஊழியருக்கு ஊழி யரா? தலைவருக்குத் தலைவரா? நான் தயார், உங் கள் தலைவரைக்கொண்டு வாருங்கள்; எங்கள் தலைவரை அழைத்து வந்து நிறுத்துகிறேன். மக் கள் யாரைத் தேர்ந்தெடுக்கிருர்கள் என்று பார்ப் போம். தயாரா? (பலத்த கைதட்டல்)

"ஒன்று தெரிகிறது—காங்கிரசை வேரோடு ஒழிக்க வேண்டுமாம்; கொஞ்சம்கூட விடக்கூடாதாம் (சிரிப்பு)

இதற்கு முக்கிய காரணம் காங்கிரசினுடைய சமதர்மக் கொள்கையாம். அதை விட்டுவிட வேண்டும் என்பதற்காக இந்த முயற்சி. இதற்காக "கொள்ளி வைக்கப் போகிறேன், வேரோடு பிடுங்கப் போகிறேன்," என்றெல்லாம் பேசுகிறார்கள். இதெல்லாம் யார் பேசுவது? ஏதோ தெருவில் போகின்ற சாதாரண ஆள் மேடையில் ஏறி இப்படி பேசிவிட்டுச் சென்றால் நான் கவலைப்பட மாட்டேன்; பொறுப்புள்ள தலைவர்கள் பேசுகின்ற பேச்சா இது ?

*10. பிரேத ஊர்வலத்திலா சந்திக்க வேண்டும் ?*

"தி. மு. க. தலைவர் சொல்லுகிறார், சுதந்திரக் கட்சி தலைவர் கொள்ளிவைத்த பிறகு, அவர் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொள்ளுவாராம்(சிரிப்பு) இதுவா பொறுப்புள்ளவரின் பேச்சு ?

"எங்கே சந்திப்பார்களாம், பார்த்தீர்களா? பிண ஊர்வலத்தில் ஒன்று சேர்வார்க்ளாம். (சிரிப்பு)

> நம்மைப் போர்க்களத்தில் சந்திக்கிறேன், என்று தி. மு. க. தலைவர் சொல்லவில்லை. அதற்குத்தைரியம் இல்லை போலிருக்கிறது. (சிரிப்பு) பிண ஊர்வலத்தில் போவார்களாம், சந்திப்பார்களாம் !

"ஊர்வலம் நிச்சயமாக விடத்தான் போகிறார்கள். என்ன ஊர்வலம் என்கிறீர்களா? தி. மு. க. வைப் பார்த்து சுதந்திரக் கட்சி அழ, சுதந்திரக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டையும் பார்த்து கம்யூனிஸ்ட் கட்சி அழ, "உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்!" என்று பிலாக்கணம் பாடிக்கொண்டு, தேர்தலிலே தோற்றுப் போகும்போது, தோல்வி ஊர்வலம்தான் விடப்போகிறார்கள் !(பலத்த சிரிப்பு, கை தட்டல்)

*11. ஊழல் 'பூச்சாண்டி' காட்டுவதில் பயனில்லை !*

"சுதந்திரக் கட்சிக்காரர்கள் ஊழல், ஊழல் என்று பூச்

சாண்டி காட்டுகிருர்கள், குழந்தைகளுக்குத் தாய் பூச்சாண்டி காட்டி மிரட்டுவதில்லையா, அதைப்போல! (தாய்மார்களைப் பார்த்து) உங்களுக்குத் தெரியாதா, உங்களுடைய குழந்தைகள் அழுதால், 'பூச்சாண்டி வருவான், உன்னைத் தூக்கிக் கொண்டு போய்விடுவான்' என்றெல்லாம் குழந்தைகளுக்குப் பயம் காட்டுகிறீர்கள். திடீரென்று குழந்தை, ''எங்கே அம்மா பூச்சாண்டி? காட்டு பார்க்கலாம்'', என்று கேட்டு விட்டால் முழிப்பீர்கள். பூச்சாண்டி எங்கிருந்து காட்டுவீர்கள்? காட்ட முடியாதல்லவா. அதே போலத்தான் 'ஊழல் எங்கே?' என்று கேட்டால், ஊழல், ஊழல் என்று கத்தும் பேர்வழிகள் காட்ட முடியாமல் திகைக்கிருர்கள்!

"இந்த வேலூருக்கு வந்து ஒரு சாக்கடையில் போய் உட்கார்ந்து கொண்டு, நாற்றம் அடிக்கிறது, காங்கிரஸ் காரர்கள் என்ன ஆட்சி செய்கிருர்கள், என்ருல் என்ன அர்த்தம்? இவ்வளவு பெரிய நகரத்தை விட்டுவிட்டு எங்கேயோ போய் உட்கார்ந்துகொண்டு, நாற்றம் நாற்றம் என்ருல், நான் என்ன செய்வேன்? அதேபோல ஊழலிலே ஊறிக்கொண்டு இருப்பவர்கள் மற்றவர்களைப் பார்த்து, ஊழல், ஊழல் என்ருல் என்ன செய்வது?

### 12. பணம் படைத்தவர்கள் பண்பு படைத்திருக்க வேண்டாமா?

"பணம் வைத்திருப்பவர்கள் நான் திட்டுவதாக எண்ண வேண்டாம்; சாதாரண வியாபாரிகளையும் நகரத்திலுள்ள சிறு வணிகர்களையும் நான் சொல்லவில்லை; பெரிய வியாபாரிகள், இலட்சம் இலட்சமாக தினசரி பணப்புழக்கத்தில் உள்ளவர்கள், அவர்களைப் பற்றித்தான் சொல்லுகிறேன்.

பழைய காலத்தில் நிலம் படைத்த பெரிய ஜமீந்தார்களும், நிலப்பிரபுக்களும் வேலை செய்தார்களா?

"சாதாரண குடியானவர்கள்தான் கூலிக்காக வேலை செய்தார்கள். ஆனல் அதில் வந்த இலாபத்தை நிலச்சுவான்

தாரர்கள்தான் அனுபவித்து வந்தார்கள். சுயராஜ்யம் வந்த பிறகு ஜமீந்தார்கள் போயாயிற்று; இப்போது நிலப்பிரபுக்கள் போகப் போகிறுர்கள். அவர்கள் ஆதிக்கம் ஒழிகிறது.

"இப்போது மில்காரர்கள்தான் கோடிக்கணக்காக சம்பாதிக்கிறுர்கள். அவர்கள் பணத்தைக் குவிக்க அரசாங்கம் பெருமளவுக்கு உதவி செய்வதை அவர்கள் மறந்து விடுகிறுர்கள்.

> பல வெளிநாட்டுச் சாமான்கள் தடைசெய்யப்பட்டுள்ளன; அதை எடுத்தால் என்னவாகும்? குழந்தைப் பருவத்திலே உள்ள பல தொழில்கள் போட்டியின்றி இலாபத்தை குவிக்க முடியுமா? அரசாங்கத் தலையீடு இல்லையென்ருல் வியாபாரம் நடக்குமா? அல்லது அரசாங்கம் இயந்திரங்களை வரவழைத்துக் கொடுக்கவில்லை, என்ருல் நடக்குமா?

"சர்க்கார் உதவிகளோடும், சலுகைகளோடும் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமான இயந்திரங்களை வரவழைத்து நாட்டில் பல தொழில்களும் வளர ஏற்பாடு செய்ய வேண்டாமா?

### 13. மாம்பலத்தாரின் கட்சி ஆதிக்க புத்தியிலே பிறந்தது!

"அப்படி தொழில்கள் ஏற்படும்போது நான் தான் இலாபம் பூராவையும் அனுபவிப்பேன், என்று சொல்லலாமா? காவேரி தண்ணீர் ஊருக்கெல்லாம் சொந்தம்; அதை மேட்டூரில் தேக்கி விவசாயத்திற்காக விடுகின்ருேம். உடனே மேட்டூர்காரர்கள், "தண்ணீர் எங்களுக்குத்தான் சொந்தம், மேட்டூரில்தானே அணைகட்டி இருக்கிறீர்கள்; எனவே வேறு யாருக்கும் தண்ணீர் தரமாட்டோம்", என்று சொல்லுவதா? சொன்னுல் நியாயம் என்று ஒப்புக்கொள்வோமா? மேட்டூர் தண்ணீரா, காவேரி தண்ணீரா, எப்படி அவர்கள் சொந்தம் கொண்டாடலாம், என்று கேட்கமாட்டோமா?

" ஆனால் நிறைய சம்பாதிப்பவர்களை அப்படியே விட்டு விட வேண்டுமென்றும், அவர்கள் சம்பாதிப்பது பூராவும் அவர்களுக்கே சொந்தமென்றும், வரிகள் போட்டு அவர்களிடமிருந்து பணவசூல் செய்யக் கூடாதென்றும் சொல்லுகிறார்கள். அதற்காக ஒரு கட்சியே பிறந்தாயிற்று. அந்தக் கட்சி நம் ஊரில்மட்டுமல்ல, உலகம் பூராவிலும், ஆதிக்கபுத்தி அளவுகடந்து யாரிடத்தில் உள்ளதோ அவர்களிடம் உண்டு.

" இப்போது வேலையில்லாப் பிரச்னை நம்முன்னாலே இருக்கிறது ; பல பேர் கால்வயிற்றுச் சாப்பாட்டிற்காகத் தான் சம்பாதிக்கிறார்கள். அவர்களை அப்படியே விட்டுவிடுவதா? நல்ல வாய்ப்பைக் கொடுத்து, அவர்கள் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்து, அவர்களையும் முன்னுக்குக் கொண்டு வரவேண்டாமா? சுயராஜ்யம் வந்த பிறகாவது அவர்கள் நிலை உயரவேண்டாமா ? அவர்களை உயர்த்துவதற்கு முயற்சி செய்தால், " நிதானமாகப் போ ", என்கிறார்களே !

### 14. ஏழைகள் எங்கும் உள்ளனர் ; அவர்களை உயர்த்துவோம் !

" குறுகிய உணர்ச்சிகளில் மனதைப் பறிகொடுத்துச் சண்டை போடக்கூடாது. இருப்பவர்கள் வேண்டுமானால் தாராளமாக சண்டை போடட்டும் ; பணக்காரர்களுக்கு வேறு வேலையில்லையென்றால் அவர்கள் சண்டையிட்டுக் கொள்ளட்டும். எங்களை விட்டுவிடுங்கள், நாங்கள் எல்லோரும் ஒரே இனம், அதாவது பட்டினிப் பட்டாளம் : எங்களைச் சண்டைக்குக் கூப்பிடாதீர்கள். வடக்கிலிருந்தாலும், தெற்கிலிருந்தாலும், தமிழன் என்றாலும் வங்காளி என்றாலும் ஏழைகள் எல்லோரும் ஒரே இனம்தான். நமக்குச் சண்டை போட நேரமில்லை. நாம் முன்னேற விரும்புகிறோம்.

" வசதி உள்ளவர்கள் எல்லாம் சேர்ந்து சுதந்திரக் கட்சி என்ற பெயரில் ஏழைகளுக்கு எதிரான இனத்தை

ஒன்று படுத்துகிறார்கள். அதுவும் நல்லதுதான் ; அப்போது தானே மக்களுக்கும் உண்மை தெரியும்.

" என்னையா நிலச்சட்டம் கொண்டு வந்தீர்கள் ? உங்களுடைய சட்டத்தால் நிலமில்லாதவர்கள் எல்லாம், நிலச் சொந்தக்காரர்கள் ஆகிவிட முடியுமா ?" என்று அவர்கள் கேட்கிறார்கள். ஜமீந்தார்களை அனுப்பினோமே, எல்லோரும் ஜமீந்தார்களாகவா ஆகிவிட்டோம் ? மைசூர் மகாராஜா, திருவாங்கூர் அரசர் இப்படி பலபேர்களை இறக்கி விட்டோமே, எல்லோரும் மகராஜாக்களாகவா ஆகிவிட்டோம் ? இல்லையே.

நம்முடைய எண்ணமெல்லாம் ஏகபோகம் ஒழிய வேண்டும்; ஆதிக்கம் அழிய வேண்டும் என்பதுதானே தவிர எல்லோரும் ஆதிக்கக்காரர்களாக இருப்பது அல்ல!

" பணம் அவர்களிடமே இருக்கட்டும் ; அதை யாரும் பறிக்கும் படியாகச் சொல்லவில்லை. ஆனால் எல்லாவற்றையும் அவர்களே அனுபவிப்பதா அல்லது அனுபவிக்கத்தான் முடியுமா ? எட்டு வீடுகள் கட்டிக் கொண்டாலும் ஒன்றில் தானே குடியிருக்க முடியும் ? செட்டிநாட்டில் ஒவ்வொரு வீடும் கோட்டை மாதிரி இருக்கும் ; அதில் வசிப்பவர்கள் இரண்டுபேர்தான் இருப்பார்கள். (ஒரே சிரிப்பு) **அப்படிப்பட்ட நிலையிலுள்ளவர்களுக்குக் குடிசைகள் மாறவேண்டும் என்ற சிந்தனை ஏற்பட வேண்டாமா ?**

" வேஷ்டி, புடவைகளும் அப்படித்தான். ஐந்நூறு வேஷ்டி, புடவைகளை வாங்கி, பீரோ நிறைய அடுக்கி வைத்துக் கொண்டு, யாராவது விருந்தினர்கள் வந்தால் திறந்து காட்டுவார்கள் ! அவ்வளவுதானே தவிர வேறு பிரயோஜனமில்லை. அதைவிட பஜாரிலே போய் காட்டக்கூடாதா? அவர்களுக்கும் உதவாமல், மற்றவர்களுக்கும் உதவாமல் பணம் முடங்கி வீணாகிப்போகாமல் வெளியே வந்து நாட்டின் செல்வத்தை மேலும் வளர்க்க உதவ வேண்டுமென்பதுதான் எங்களுடைய கொள்கை ; இது தவறா ?

"சில பேர்கள் வெள்ளைக்காரர் ஆட்சியிலே நடந்தது போல் செய்துவிடுங்கள் என்கிறார்கள். அவர்கள் காலத்தில் குமாஸ்தா வேலை செய்வதற்கு வேண்டிய படிப்பு, பாதுகாப்புக்குப் போலீஸ், முக்கியமான போக்குவரத்துக்கு ரோடு வசதிகள் ஆகியவை மட்டும் அமைக்கப்பட்டன. அதே போல இப்போதும் விட்டுவிட வேண்டுமாம்.

அப்படி விட்டுவிட்டால் ஏழைப் பையன் எப்படி படிப்பான்? கையைக்கட்டி படிக்கச் சொன்னால் முடியுமா? அவன் படிப்பை நிறுத்தி ஆடு மேய்க்கப்போகிறான். அத்தோடு அவன் படிப்பு நின்று விடுகிறது.

"அவனை அந்தக் கதியில் விட்டுவிட நாங்கள் தயாராக இல்லை. இலவசமாக படிக்க நிறைய பள்ளிக்கூடங்கள் வைக்கிறோம். அதெல்லாம் கூடாது, மாடு மேய்க்கிறவன் மாடு மேய்த்துக்கொண்டே இருக்கட்டும் என்று கருதினால் அதைத் தைரியமாக சொல்லுங்கள். (கைதட்டல்)

### *15. சமதர்மம் இருக்கட்டும். சமசந்தர்ப்பமேனும் வேண்டாமா?*

"தண்ணீர் கீழ்நோக்கி ஓடுகிறது; திடீரென்று நின்றால் தேக்கம் ஏற்படுகிறது; அதைப் பகிர்ந்து தரவேண்டும். அதேபோல் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெருகும் காலத்தில், அந்த வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட இடத்தில் தேங்கி விடாமல், பிரித்துத் தரவேண்டும். அப்படி செய்யும்போது கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது?

"நம்முடைய இலட்சியம் சமதர்மம் என்று சொன்னேன். அது ஏற்படுவது ஒருபுறம் இருக்கட்டும்; சமசந்தர்ப்பமேனும் இவர்கள் தரத் தயாராக இருக்கிறார்களா? அவர்களை, "எங்களோடு போட்டிக்கு விடுங்கள்" என்று கேட்கிறார்கள். கோதாவுக்குச் சமமான ஆட்களைத்தானே விடவேண்டும்? பொருளாதாரத்தில் பலவீனமானவர்களைப் பலசாலிகளோடு போட்டிக்கு விடுவதற்கு முன்னால் அவர்களுக்குச் சமசந்தர்ப்

பத்தைக் கொடுத்துச் சாமர்த்தியத்தை ஏற்படுத்த வேண்டும். அதை எதற்காக வீணுக எதிர்க்கிருர்கள் ?

### 16. காங்கிரஸ் ஏழைகளின் இயக்கம்!

"மந்திரிகளாக இருப்பது மாலை வாங்கித்தொண்டு ஊர் சுற்றுவதற்கு அல்ல. நமக்கொரு இலட்சியம் உண்டு; நாட்டிலுள்ள ஏழைகளை வாழவைக்க வேண்டும். அதற்காக காங்கிரஸ் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது. அதைக் கலைக்கச் சொன்ஞல் ஏன் கலைக்கவேண்டுமென்று கேட்கிறேன்! தாழ்த்தப்பட்டவர்களையும் ஏழைகளையும் ஆதரிப்பதால் கலைக்கவேண்டுமென்று சொல்லுகிருர்களா ?

"காங்கிரசிலிருந்து ஓடிவிட்டவர்கள்தான் இப்படி சொல்லுகிருர்கள் ; அவர்கள் போனதுபற்றிக் கவலையில்லை.

**குடிசைக்காரர்கள் காங்கிரசில் வந்துவிட்டார்கள்; எனக்குச் சந்தோஷம்தான். காங்கிரசுக்குச் சொந்தக் காரர்கள் அவர்கள்தான்.**

"எனக்கு நாற்பது வருஷ அனுபவம் காங்கிரசில் உண்டு ; அது ஏழைகளுக்காகத்தான் இருக்கிறது. சோறு இல்லாமல், வீடு இல்லாமல் இருந்தவர்கள் எல்லாம் இப்போது காங்கிரசை நெருங்கி வருகிருர்கள். அதனுல்தான் காங்கிரசிற்குப் பலம் கூடியிருக்கிறது.

### 17. எட்டு நொண்டிகள் சேர்ந்தாலும் நொண்டி நொண்டி தானே.

"இப்போது தேர்தல் கூட்டு அமைக்கப் போவதாக சொல்லுகிருர்கள். அதைக்கண்டு நமக்குப் பயமில்லை; அதனுல் ஒன்றும் நடக்காது. அவர்களுக்குத் தனியாக நின்று நம்மை எதிர்க்க பலமில்லை. தி. மு. க. வுக்குப் பலம் இருந்தால் அவர்களே நின்று சண்டை போடலாம். பலவீனமான

மூன்று கட்சிகளும் கூட்டுச் சேர்ந்துள்ளன: இதைக் கண்டு நான் ஏன் பயப்படவேண்டும் ?

எட்டு நொண்டிகள் சேர்ந்தாலும் நொண்டிகள் தானே ! (கைதட்டல்)

தி. மு. க. நாட்டுப்பிரிவினையைக் கோருகிறது; சுதந்திரக் கட்சியோ அகில இந்தியக் கட்சி. இவர்கள் இருவரும் கூட்டு எதற்காக சேருகிறார்கள் என்று கேட்டால், நான் பயப்படுகிறேன் என்கிறார்கள். இதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா ?

உண்மையில் ஏன் கூட்டு சேருகிறார்கள் என்று நான் கேட்டதும் அவர்கள் பயப்பட்டு, மாறி மாறி பேசுகிறார்கள். கூட்டு உண்டு என்கிறார்கள்; கூட்டு இல்லை என்றும் சொல்லுகிறார்கள். இப்படி பயத்தாலே மாறி மாறி பேசுவது அவர்கள் தான்.

### *18. முன்பு ஜஸ்டிஸ் கட்சி! இப்போது தி. மு. க.!*

திட்டம் போடுகிறோம். ஏன், 1000 கோடி கேட்கிறது தானே என்று சொல்லுகிறார்கள். மாவுக்கேற்ற தோசை தானே, கிடைக்கும் ? இது தெரியாமல் என்னை வடநாட்டானிடம் பயப்படுகிறேன் என்று சொல்லுகிறார்கள். நான் எதற்காக வடநாட்டிலே இருப்பவர்களுக்குப் பயப்படவேண்டும்? அவர்களுடைய தயவில் நான் மந்திரி ஆகவில்லை; வேண்டுமென்றால் நம்முடைய உதவியால் அவர்கள் மந்திரிகளாக இருக்கிறார்கள், என்று சொல்லலாம். ஆகவே நான் ஏன் பயப்படவேண்டும்?

சுதந்திரக் கட்சி தர்மோபதேசம் செய்கிறது. நாம் தேர்தலுக்குப் பணம் வசூல் செய்வதாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள் ; ஆனால் அவர்கள் ஒரு கோடி கேட்கிறார்கள். (சிரிப்பு)

“ முஸ்லீம்களிடம் சென்று சுதந்திரக்கட்சி ஜாதிப் பிரச்னையைக் கிளப்புகிறது; அவர்களில் யாருக்கும் மந்திரி பதவி

இல்லை என்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி என்னென்ன முறைகளைக் கையாளுமோ, அதே வழிகளைத்தான் சுதந்திரக்கட்சியும் பின்பற்றுகிறது. அதை மறுக்கமுடியுமா? அதில் தி. மு. க. எப்படி போய் சேர்ந்திருக்கிறது?

"காங்கிரசுக்குக் குழிதோண்ட அவர்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளுகிறார்களாம்; குழியில் அவர்கள்தான் விழுவார்கள். சுயராஜ்யப் போராட்ட காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியாக இருந்து தொல்லை கொடுத்த அவர்கள் இப்போது தி. மு. க.வாக வந்திருக்கிறார்கள். அவர்களைக் கண்டு நாம் ஒன்றும் கவலைப்படவில்லை!

## *19. ஆத்திரத்தில் பெரியவர்கள் அறிவு கெடலாமா?*

"நாட்டைக் காப்பாற்றப் போகிறோம் என்று வாய் கிழியப் பேசும் சுதந்திரக் கட்சி தி. மு. க.வோடு எதற்குச் சேர்கிறது? அதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? அதனாலே தேசத்திலே விளையக்கூடிய அனர்த்தங்களைச் சிந்தித்தார்களா?

"காங்கிரசின்மீதுள்ள கோபத்திற்கான காரணம் எனக்குப் புரிகிறது. அதற்காக தி. மு. க. வோடு போய்ச் சேரலாமா? அது எங்கே கொண்டுபோய்விடும்? எத்தகைய விபரீதங்கள் ஏற்படும்? இதையெல்லாம் சிந்தித்தார்களா?

**"நாட்டை உடைக்கப்போகிறேன் என்று வெளிப்படையாக சொல்லுகின்ற கட்சியோடு சேர்ந்துகொண்டு, தேச ஒற்றுமைக்காக பாடுபடுகிறேன், என்று சொன்னால் அதை எவரேனும் நம்புவார்களா?**

"ஜாதி, மதம் முதலியவற்றின் பலம் போய்விட்டது. இப்போது மொழியுணர்ச்சி மூலம் புதுப்பலம் உண்டாக்க நினைக்கிறார்கள். இங்குதான் ஜாக்கிரதை தேவை. மொழிப்பற்று வேண்டியதுதான், பாஷை வெறி வேண்டாம்.

"இங்கே தெலுங்கு பள்ளிக்கூடம் வைக்கவேண்டுமென்று சொல்லுவதாக வைத்துக்கொள்ளுவோம். உடனே நாம் மாட்டோம் என்று சொல்லுவதோ, அதற்காக

சண்டை, ஊர்வலம் நடப்பதோ நிகழலாமா ? கூடாது. அவசியம் இருந்தால் தெலுங்கு பள்ளிக்கூடம் வைக்கவேண்டியதுதான். அதேபோல முஸ்லீம்களுக்குப் பள்ளிக்கூடம் அவசியப்படுகிறதென்றால் அதையும் வைக்க வேண்டியதுதான்.

மகாத்மா காந்தியிடம் நாம் படித்துக்கொண்ட பாடம் மொழி, ஜாதி, மத வேறுபாடுகளை மறப்பதுதான். அதைவிடுத்து வேறு வழியில் போகலாமா ? பொறுப்புள்ள தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு இத்தகைய விவேகமற்ற செயல்களைச் செய்யலாமா ?

## 20. சேர்ந்து உழைத்தால் செழுமை காணுவோம்

" ஆகவே மக்கள் இவர்களிடம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். முக்கியமாக பொருளாதார உயர்வு ஏற்பட, திட்டத்தை நன்கு நிறைவேற்ற, பொதுமக்கள் ஒத்துழைப்பு தரவேண்டும். நான் நிறைய பள்ளிக்கூடங்கள் திறந்தும் படிப்பதற்குப் பிள்ளைகளை அனுப்பவில்லையென்றால் பலன் என்ன ? பகலுணவு சமைத்துத் தயாராக வைத்திருந்தும் பிள்ளைகள் சாப்பிட வரவில்லையென்றால் என்ன ஆகும் ? ஆகவே பொதுமக்கள் நல்ல காரியங்களுக்கு ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" **நம்முடைய குழந்தைகள் காலத்திலாவது, சோறு இல்லை, துணி இல்லை என்ற நிலைபோய், சுபிட்சமாக வாழவேண்டும்.** நமது பரம்பரை மறைந்தபின் அவர்களுக்குத் தொல்லையே இருக்கக்கூடாது. **அதுதான் காங்கிரசின் கொள்கை.**

" இதில் தாய்மார்களுக்கு நிறைய பொறுப்பு உண்டு. அரசாங்கம் நல்லபடியாக நடக்கத் தாய்மார்கள் நிறைய அக்கறை காட்ட வேண்டும். (மாதர் பகுதியைப் பார்த்து) " காங்கிரஸ் நல்லபடியாக வாழ, நாங்கள் பலம் அளிக்கிறோம் ", என்று நீங்கள் சொல்ல வேண்டாமா ? சுயராஜ்யம் உங்களை நம்பித்தான் வாங்கி இருக்கிறோம். கடவுள் பக்தி முதல் எல்லா பிரச்னைகளிலும் நீங்கள்தான் முன்னுலே

நிற்பவர்கள்; ஆண்கள் உங்கள் பின்னால்தான் நிற்பார்கள். ஆகவே சில்லறைச் சண்டைகள் இல்லாமல் நாடு வாழ வேண்டும் என்பதற்காக நீங்கள் உழைக்க வரவேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (கரகோஷம்)

### *21. காங்கிரசின் சேவை கண்டிப்பாகத் தேவை !*

" காங்கிரசுக்கு வைர விழா கொண்டாட வேண்டுமென் பதைத் தலைவர் சொன்னார். காங்கிரஸ் எழுபத்தைந்து வருட காலம் ஒற்றுமையைப் போதித்திருக்கிறது.

> காங்கிரஸ் போனால் நாட்டின் ஒற்றுமையே போய்விடும்; பெரியார் தமிழ் நாட்டைப் பிரிக்கச் சொல்லுவார்; தி.மு.க. திராவிட நாட்டைப் பிரிக்கச் சொல்லுவார்கள். நாடு உடைபட்டுப் போய்விடும். ஆமாம், காங்கிரஸ் பலவீனமடைந்தால் நாட்டுக்கே ஆபத்து; அதைத்தான் சுதந்திரக் கட்சி செய்கிறது.

" நாட்டில் ஒற்றுமை நிலவ ஸ்ரீ. அளகேசன் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இது மிகவும் முக்கியம். தேர்தல் பெரிதல்ல. கண்டிப்பாய் ஜெயிப்போம். (பலத்த கைதட்டல்) சந்தேகமேயில்லை. ஆகவே முக்கிய பிரச்னை நாட்டின் ஒற்றுமைதான். இதைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும், ஸ்ரீ அளகேசன் அவர் களும் கவனிக்க வேண்டும்.

" இங்கே வெகு சிறப்பாக மகாநாடு நடத்தியவர் களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன். (ஒரே ஆரவாரம், பலத்த கை தட்டல்)

சாந்தி பிரஸ்,
சென்னை - 1.